# 2025 ஆம் ஆண்டுக்கான நில அளவையாளர் நாயகத்தின் செயலாற்றுகை அறிக்கை

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

## செலவினத் தலைப்பு இலக்கம் - 288

**உள்ளடக்கம்**


| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | நிறுவன வரைவாக்கம் | |
| | 1.1 அறிமுகம் | 38-39 |
| | 1.2 இக்கு, செயற்பணி, நோக்கங்கள் | 40 |
| | 1.3 அடிப்படைச் செயற்பாடுகள் | 41-42 |
| | 1.4 நிறுவன அமைப்பு | 43 |
| | 1.5 திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள் | 44-45 |
| 2.0 | முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்குகள் | 45-46 |
| 3.0 | ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை | 47-59 |
| 4.0 | செயலாற்றுகைச் சுட்டிகள் | 60-62 |
| 5.0 | நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை | 62-63 |
| 6.0 | மனித வள விபரம் | 63-67 |
| 7.0 | இணக்கப்பாட்டு அறிக்கை | 68-77 |
| 8.0 | முடிவுரை | 78 |
| 9.0 | இணைப்புகள் | |
| | i நில அளவையாளர் நாயக அலுவலகத்திஜன் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | (பக்கங்கள் i - xxxvi) |
| | ii களஅலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | (பக்கங்கள் i – xvii) |
| | iii அளவையியலும் படமாக்கலும் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | (பக்கங்கள் i - vi) |

# 1.0 நிறுவன வரைவாக்கம்

## 1.1 அறிமுகம்

ஆங்கிலேயப் பேரரசின் குடியேற்ற நாடாகி நான்கு வருடங்களின் பின்னர் இலங்கையின் முதலாவது அரச திணைக்களமாக 1800 ஆகஸ்ட் 02 ஆம் திகதி காலியில் தாபிக்கப்பட்ட இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் முதலாவது நில அளவையாளர் நாயகமாக திரு.ஜோகப் ஜோன்வில் அவர்கள் நியமிக்கப்பட்டார். பெருந்தோட்டப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக கோப்பி/ தேயிலைக்கு அவசியமான காணிகளை ஒதுக்குதல் மற்றும் வீதி முறைமையை நிறுவுவதற்கு அவசியமான அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல், 1897ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தரிசு நிலங்கள் சட்டத்தின் கீழ் காணிகளைச் சுவீகரித்தல் அக்காலத்தின் பிரதான பணிகளில் ஒன்றாக இருந்ததுடன், அக்காலத்திய நில அளவை உபகரணங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட துல்லியத்தன்மை தொடர்பாக திருப்தியடைந்து திணைக்களத்தின் நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்ப கால கட்டத்தில் நிலவிய முகாம் முறைக்குப் பதிலாக அலுவலக முறைமையைக் கொண்டு வருதல் போன்ற நல்ல கட்டமைப்பு மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ள நில அளவைத் திணைக்களமானது, காலத்திற்கு ஏற்ற வகையில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளை உள்வாங்கி உருவாக்கப்பட்ட நில அளவைத் திணைக்களமானது தற்போது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்னோடியாக ஒரு தனித்துவமான தேசிய பணியை நிறைவேற்றி வருகிறது.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட நில அளவீடுகளில், இறப்பர் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டு காணிகளை வரைபடமாக்குதல், திடீர் வெள்ளநீரின் உயர் மட்டத்தை அடையாளமிடுவதற்காக shape file தயாரித்தல், வெள்ளச் சேதம் பற்றிய நில அளவீடுகள், நில அளவை தினத்தை முன்னிட்டு பாடசாலைகளை நில அளவீடு செய்தல், நீர்ப்பாசன சுபீட்ச நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற குளங்களின் அளவீடுகள் போன்ற அரசாங்கத்தின் விசேட செயற்திட்டங்களுக்கான அளவீடுகள், தேசிய பூங்காக்கள் மற்றும் புதிய வன ஒதுக்குகளை அளவிடுதல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

மேலும், திணைக்களத்தின் பணிகளின் முக்கிய அங்கமாக விளங்கும் வரைபடமாக்கலின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான பல்வேறு விடயங்களுடன் தொடர்புடைய இட விளக்கப் படங்கள் மற்றும் ஆய்வுப் பொருள்சார் வரைபடங்களை தயாரித்தல் மற்றும் வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு இணங்க வரைபடங்களை தயாரிக்கின்றதுடன் தேசிய தேவைகளைப் போலவே பல்வேறு அரச நிறுவனங்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக புவியியல் தகவல் முறைமையை இற்றைப்படுத்துதல் மற்றும் தரவுகளை வழங்குதல் முன்னெடுக்கப்பட்டு உள்ளது. வாடிக்கையாளர் சேவை மத்திய நிலையங்கள் ஊடாக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு அவசியமான வரைபடங்கள் மற்றும் தரவுகளை வழங்கும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. கல்வி அமைச்சின் வேண்டுகோளின் பேரில் பாடசாலை வரைபடங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப தற்போதுள்ள தரவுகளைப் பயன்படுத்தி வரைபடங்களை தயாரித்தல், வாடிக்கையாளருக்கு நிகழ்நிலை மூலம் வரைபடங்கள் வழங்கப்படுகின்றதுடன், கூரியர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்களுக்கு 1:50,000 (1 ஆவது/ 2 ஆவது), 1:10,000 மற்றும் Lidar போன்ற எண்மத் தரவுகளைப் பெறுவதற்கான வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

வரைபடங்களை நிகழ்நிலை முறையில் வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதற்கான கூரியர் வசதியை திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. மாவட்ட நில அளவை அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் நில அளவைக் கோரிக்கைகளை SRIMS For DS தரவுத்தளத்தில் சேர்ப்பதற்கு பிரதேச செயலகம் மூலம் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகையைப் பாதிக்கும் பிரதான காரணியாக ஆளணிப் பற்றாக்குறையைக் குறிப்பிடலாம். இவ்வருடம் 92 பயிலுநர் நில அளவையாளர்கள், 45 வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், மற்றும் 75 நில அளவை கள உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

தற்போதுள்ள மனித வளங்களை சிறப்பாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் தரமான சேவையை வழங்குவதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கற்கைநெறிகளுக்கு அலுவலர்களை வழிநடாத்துவதன் மூலம் தொழில்சார் திறமை வாய்ந்தவர்களை உருவாக்குவதற்கான மனித வள அபிவிருத்தி இலக்குகளும் அடையப்பட்டுள்ளன.

மேலும், திணைக்கள உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாடு மற்றும் உள விருத்திக்காக,

- பல்வேறு மத நிகழ்ச்சிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வாசிகசாலை வசதிகளை வழங்குதல்
- கேரம், மேசைப்பந்து மற்றும் லெதர் பந்து விளையாட்டுகளுக்கு வாய்ப்பளித்தல்
- இசை வட்டம் மூலம் உத்தியோகத்தர்களின் இரசனை மற்றும் பாடல் , இசைக்கருவிகளை வாசித்தல் திறன்களை மேம்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் அவற்றில் சிலவாகும்.

அவற்றில், 2025 ஆம் ஆண்டில் கேரம் சி பிரிவில் அரையிறுதிப் போட்டியில் கலந்து கொண்டமை.

இவ்வாறு ஊழியர்களின் நலன்புரிக்காக பாராட்டத்தகு செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ள இவ்வாண்டில் பல்வேறு சேவைகளுக்குரிய அண்ணளவாக 6000 உத்தியோகத்தர்கள் தற்பொழுது நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம், மாகாண நில அளவை அலுவலகங்கள், மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் பிரதேச நில அளவை அலுவலகங்கள் ஆகியவற்றில் சேவையாற்றி, அரசினதும் பொதுமக்களினதும் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பணியாற்றி வருகின்றதுடன், அதற்காக முறையான வழிகாட்டல்களை வழங்கி தற்பொழுது பணியாற்றி வருவது 58 ஆவது நில அளவையாளர் நாயகம் ஆகும்.

## இலக்கு

**காணித் தகவல்கள் வழங்குவதில்
என்றும் முன்னணியில் நிற்றல்**

## செயற்பணி

**தொழில்முறை திறனுடன் கூடிய
சேவைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற குழுவினால்
பூமி பற்றிய தரமான தகவல்கள் - தயாரிப்புக்கள் மற்றும்
சேவைகளை வழங்குதல்**

## நோக்கங்கள்

கொழும்பு தலைமை அலுவலகத்தினால் நிருவாகிக்கப்படுகின்ற மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள், தியத்தலாவ அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் என்பவற்றோடு நாடளாவிய ரீதியில் பரந்துபட்டுள்ள அலுவலக வலையமைப்பின் மூலம் திணைக்களத்தின் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளன. மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் இந்த அலுவலகங்களின் மூலம் நடைபெற்ற செயற்பாடுகள் கீழ்வரும் நோக்கங்களை இலக்காகக் கொண்டன.

- வருடாந்த நில அளவீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், படமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அளவையியலும் படமாக்கலும் நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துதல்.
- பதவியணிக்கு பயிற்சி வழங்குதல்.
- குறித்த ஆண்டுக்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான அசையா மற்றும் அசையும் சொத்துக்களை கட்டியெழுப்பி, பேணி வருதல்.
- நில அளவைகள் தொழிலின் தரம் தொடர்பில் நிருவகித்தல் மற்றும் அதன் தரத்தைப் பேணுதல்.
- வழங்கப்பட்ட அரசாங்க நிதியை, ஆண்டுக்குள் நிறைவு செய்ய வேண்டியிருந்த அவ்வவ் நோக்கங்களுக்காக பயன்படுத்துதல்.
- திணைக்களத்தின் பதவியணியின் நன்னடத்தையைப் பேணுதல் மற்றும் நலன்புரி விடயங்கள் தொடர்பில் செயற்படுதல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

1. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியதிச்சட்ட நில அளவீடுகளை மேற்கொண்டு நன்கொடைப் பத்திரங்களை வழங்குவதற்கு கோட்டு வரைவுகளை வெளியிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. அதிவேக நெடுஞ்சாலைகள், வீதிகளை விசாலமாக்குதல், விமான நிலையங்கள், துறைமுகங்களை ஆரம்பித்தல், சுற்றுலாத்துறைச் செயற்திட்டங்கள், மின் வலுச் சக்திச் செயற்திட்டங்கள் போன்ற பாரிய அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கான அடிப்படைத் தேவைகளான காணி அளத்தல் மற்றும் சுவீகரித்துக் கொள்வதற்கான நில அளவீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

3. பிரதேச செயலாளர்களிடமிருந்து பல்வேறு தேவைப்பாடுகளின் கீழ் கிடைக்கப்பெறுகின்ற நில அளவீட்டுக் கோரிக்கைகளுக்கு அமைவாக நில அளவீடுகளை மேற்கொண்டு, உரிய நிலப்படங்களைச் சமர்ப்பித்தல்.

4. நீதிமன்றங்களின் தேவைப்பாடுகளுக்கு அமைய, நீதிமன்ற ஆணைக்குழுவின் நில அளவைகளை மேற்கொள்ளல். உரிய தட வரைபடங்களை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் வழங்குதல்

5. பிம் சவிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உரித்துப் பதிவு செய்யும் சட்டத்திற்கு அமைய நாட்டில் அமைந்துள்ள அனைத்து அரச மற்றும் தனியார் காணிகளை பணம் அறவிடாமல் அளவீடுகளை மேற்கொண்டு, கடத்திரள் வரைபடங்களைத் தயாரித்து உரிமைச் சான்றிதழ்களை வெளியிடுவதற்காக காணிப் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு வழங்கும் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்துதல்.

6. திணைக்களத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட ஓர் அங்குலத்திற்கு ஒரு மைல் எனும் பிரதேசவியல் வரைபடக் கோவையினைப் பயன்படுத்தி , 1:50,000 புவியியல் பண்புகளைக் கொண்ட பிரதேசவியல் வரைபடக் கோவையினைத் தயாரித்தல், இற்றைப்படுத்தல், முழு நாட்டையும் உள்ளடக்கி 1:10,000 புவியியல் பண்புகளைக் கொண்ட வரைபடக் கோவையினைத் தயாரித்தல், தொனிப்பொருள் மற்றும் விசேட பணிகளுக்காக வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை வெளியிடுதல்.

7. திணைக்களத்தின் ஆரம்பம் முதல் தயாரித்து வந்த நிலப்படங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காக தனது காணி உரித்துக்கான நிலப்படம் ஒன்றினை விரைவாகவும் மற்றும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ளும் வசதியினை வழங்குதல்.

8. திணைக்களத்தின் அலுவலர் குழாத்திற்கு உரிய பரீட்சைகளை நடாத்துதல்

9. முழு நாட்டையும் உள்ளடக்கி முறையான காணித் தகவல் முறைமை ஒன்றைத் தயாரித்தல்

10. 1952 - 2014 காலப்பகுதியில் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வான் ஒளிப்பட முறை அளவை புகைப்படங்களை வரைபடமாக்கல், அபிவிருத்தித் திட்டங்கள், நுகர்வோர் தேவைப்பாடுகள் முதலியவற்றிற்குப் பயன்படுத்தக் கூடியவகையில் வழங்குதல்.

11. ஒளி கண்டறிதல் மற்றும் வரைதல் சார் தொழில்நுட்பம் (LiDAR) என்பவற்றினை இலங்கையில் அறிமுகம் செய்தல் மற்றும் அதனூடாகத் தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளைச் செய்து கொடுத்தல்.
12. இலங்கை மக்களின் மரபுரிமையுடன் பின்னிப்பிணைந்த தேசிய ஒற்றுமைக்கு துணை புரியும் சரியானதும், உறுதியானதும், நிச்சயார்த்தமுமான புவியியல் பெயர்கள் மற்றும் தரவு முறைமையினூடாக அறிமுகம் செய்தல்.

13. விண்வெளிசார் தரவுகள் மற்றும் தகவல்களைப் பொதுவாகப் பயன்படுத்துதல் மற்றும் பரிமாறுதல் என்பவற்றிற்காக முறையான தேசிய செயற்றிட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கைகளைத் தயாரிப்பதற்கு அவசியமான உதவிகளை இலங்கைத் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழங்குதல்.

14. புவிப்பாத்துக் கட்டுப்பாட்டு வலையமைப்பு அமைத்தல் மற்றும் உலக இடங்காண் செயற்கைத் துணைக்கோள்கள் அமைப்பு ( GLOBAL NAVIGATION SATELLITE SYSTEM – GNSS ) தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் உயர் செம்மையுடன் அளவீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் உலக இடங்காண் செயற்கைத் துணைக்கோள்கள் அமைப்பு ( GNSS ) தொழில்நுட்பம் மூலம் இலங்கையின் தொடர்ச்சியான செயற்பாட்டு முதன்மை நிலையம் (SRI LANKA CONTINUOUSLY OPERATING REFERENCE STATION – SLCORSnet ) வலையமைப்பை அமைப்பதன் மூலம் புவிப்பாத்து அளவீட்டுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை இலகுவாக்குதல்.

15. திணைக்களத்தின் கீழுள்ள நில அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் மூலம் பட்டப்படிப்புப் பாடநெறிகள், உயர் டிப்ளோமாப் பாடநெறிகள், டிப்ளோமாப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள் நடாத்துவதன் ஊடாக, திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைய உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு செயன்முறைப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்.

16. உத்தியோகத்தர்களின் அறிவை விருத்தி செய்வதற்காக வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துதல்.

17. காணி அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் என்பவற்றிற்கு உரிய விடயங்கள் தொடர்பாக அவசியப்படக்கூடிய ஆய்வுகளை நடாத்துதல்.

18. நில அளவையியல் தொழிற்றுறைக்குத் தேவையான தரமாக முறையாக நடாத்திச் செல்லுதல்.

19. உரிமைகளைப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் அரச நில அளவையாளர்களின் மற்றும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் கடத்திரள் அளவையியல் தொடர்பாக நில அளவையாளரின் தேர்ச்சி தொடர்பாக அங்கீகாரச் சான்றிதல் வெளியிடுதல். காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் சட்டத்தின் கீழ், இறுதிக் கிராம நிலப்படங்கள் மற்றும் புவியியல் பண்புசார் நிலப்படங்களைத் தயாரித்தல்.

20. அரச நிறுவனங்களுக்கு நில அளவை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வழங்குதல்.

21. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்காக திணைக்களத்தின் கடமைப்பொறுப்புக்கள் மற்றும் பல்வேறு விடயங்களின் கற்கைகளுக்காக கல்விக் கருத்தரங்குகளை நடாத்துதல்.

1.4 நிறுவன அமைப்பு

# நில அளவைத் திணைக்களம் -2025




| | | | |
|---|---|---|---|
| மேலதிக நி.அ.நா. | - மேலதிக நில அளவையாளர் நாயகம் | ஆ.மு.தொ.நா. | - ஆவண முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் நாமங்கள் |
| சி.பி.நி.நா. | - சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் | க.உ. | - கட்டிடமும் உபகரணமும் |
| மா.நி.நா. | - மாகாணம் நில அளவையாளர் நாயகம் | அ.அ. | - ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி |
| பி.நி.நா. | - பிரதி நில அளவையாளர் நாயகம் | கா.த.க. | - காணித் தகவல்கள் கட்டமைப்பு |
| சி.நி.அ. | - சிரேஷ்ட நில அளவை அத்தியட்சர் | பு.த.க. | - புவியியல் தகவல் கட்டமைப்பு |
| நி.அ. | - நில அளவை அத்தியட்சர் | வி.ஒ.அ. | - விமான ஒளிப்பட அளவைகள் |
| தொ.நி.உ. | - தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர் | தொ.கோ.பி. | - தொலைவுரா கோள்கள் பிரிவு |
| நி.உ. | - நிர்வாக உத்தியோகத்தர் | நி.அ.வ.நி. | - நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம் |
| பி.தொ.நி.உ. | - பிரதி தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர் | மு.அ.ப.பி | - முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவு |

| | | | |
|---|---|---|---|
| வி.நி.அ.த.க. | - விசேட நில அளவை மற்றும் தரக் கட்டுப்பாடு | வா.ஒ.ஆ.தொ.உ. | - வான் ஒளிப்பட ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| பி.அ.கா. | - பிரதேச அளவை காரியாலயம் | வி.தொ.உ. | - வினை தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| த.கா. | - தலைமை காரியாலயம் | த.தொ.உ. | - தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| தே.வி.தா.உ. | - தேசிய விண்வெளித் தரவுகள் உட்கட்டமைப்பு | த.தொ.உ.த. | - தகவல் தொழில்நுட்ப உதவியாளர் |
| வ.தொ.உ. | - வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் | அ.உ.தொ. | - அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் |
| தொ.தொ.உ. | - தொலைவுணர்வு தொழில்நுட்ப உத்தியோகத்தர் | அ.உ. | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| ஒ.தொ.உ. | - ஒளிப்படவியலாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | மு.சே.உ. | - முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் |
| அ.தொ.உ. | - அச்சுக்கலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் | மொ. | - மொழிபெயர்ப்பாளர் |

## 1.5 **திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள்**

அளவையியல் மற்றும் படமாக்கலை பிரதான வகிபாகமாகக் கொண்ட நில அளவீடுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படுகின்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தில் பிரதானமான 03 பிரிவுகள் நடாத்திச் செல்லப்படுகின்றன.

1.5.1. நில அளவையாளர் நாயகம் அலுவலகம்
1.5.2. வெளிக்கள அலுவலகம்
1.5.3. அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம்

### 1.5.1 **நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்**

நில அளவீடுகளை மேற்கொள்வது நாடு முழுவதும் அமுல்படுத்தப்படுகின்ற களக் கடமையாக உள்ளதுடன் அதன் பூரண மேற்பார்வையானது பிரதான அலுவலகத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. படமாக்கலின் கீழ் புவியியல் பண்புகளுடன் கூடிய வரைபடங்கள் தயாரித்தல், தொனிப்பொருள் படங்கள் தயாரித்தல், நுகர்வோரின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப வரைபடங்களைத் தயாரித்தல் என்பன தலைமை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குத் தேவையான நிலத் தகவல்கள் வான் புகைப்படம், செய்மதிப் படங்கள் முதலியவற்றின் உதவியோடு வழங்குவதற்காக களஞ்சியப்படுத்துவதும் தலைமை அலுவலகத்திலுள்ள படமாக்கலுடன் தொடர்புடைய கிளைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களாகும்.

திணைக்களத்தின் செயற்பாடுகளை உகந்த முறையில் நடாத்துவதற்காக மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம், திணைக்களத்திற்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகள் நில அளவையாளர் நாயக நிறுவனங்கள், களஞ்சியம், கட்டிடங்கள் உபகரணங்கள் எனும் பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படும். திணைக்களத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் வெளிக்கள அலுவலகங்களுக்குத் தேவையான ஒதுக்கீடு மற்றும் பணம் பெற்றுக்கொடுத்தல் என்பன தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக டிஜிட்டல் தரவினைப் பேணுதல் மனித, பௌதீக வள முகாமைத்துவகத்திற்குத் தேவையான தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல், அளத்தல் தொடர்பான வேண்டுகோள்களுக்கான தரவு முறைமையை நடாத்திச் செல்லுதல் முதலிய அனைத்துத் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாடல் நடவடிக்கைகள் மற்றும் இணையத்தளத்தை நடாத்திச் செல்லுதல் போன்றனவும் தலைமை அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு உள்ளிட்ட தொழில்நுட்பப் பிரிவின் ஒருங்கிணைப்பிலேயே நடைபெறுகின்றன. திணைக்களத்தின் அனைத்து சட்ட நடவடிக்கைகளும் சட்டப் பிரிவின் மூலமே மேற்கொள்ளப்படுவதுடன் விசேட அளத்தல் நடவடிக்கைகளுக்காக தலைமை அலுவலகத்தில் விசேட அளத்தல் அலகு ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. புவியியல் பிரிவின் மூலம் அனைத்து கிடைமட்ட மற்றும் செங்குத்து நிருவாகப் புள்ளிகள் உருவாக்குதல் மற்றும் நிருவாக வலையமைப்பினை நடாத்துதல் மற்றும் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

செயலாற்றுகை தொடர்பான விபரங்களுக்கு தயவு செய்து இணைப்பு i ஐப் பார்க்கவும்.

### 1.5.2 **வெளிக்கள அலுவலகம்**

அரசாங்கத்தின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக காணிகளை அளத்தல், பொது மக்களுக்கு காணி உரித்துரிமைப் பத்திரங்களை வழங்குவதற்கு அவசியமான அடிப்படைப் பணியாக காணிகளை அளத்தல், காணி உரிமையை நிர்ணயம் செய்வதற்காக "பிம்சவிய" செயற்திட்டத்தின் கீழ் காணிகளை அளத்தல், பிணக்கங்கள் நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்படுகின்ற உத்தரவுகளின் அடிப்படையில் அளவீடுகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு அளவீட்டுத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகங்கள் 09, சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் விதமாக மாவட்ட நில அளவை அலுவலகங்கள் 25, பிரதேச நில அளவை அலுவலகங்கள் 87, புவிப்பாத்து அளவீடுகளுக்காக உள்ள அலுவலகங்கள் 04 (நில அளவையாளரின் அலுவலகம் மற்றும் அளவையியலும் படமாக்கலும் அலுவலகங்கள் தவிர) என்பன திணைக்களத்தின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்றன.

செயலாற்றுகை தொடர்பான விபரங்களுக்கு தயவு செய்து இணைப்பு ii ஐப் பார்க்கவும்.

### 1.5.3 **அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனம் - தியத்தலாவ**

பழைய மற்றும் நவீன காணி அளத்தல் தொழில்நுட்ப முறைமை பற்றிய செயன்முறைப் பயிற்சிக்கான வசதிகளைக் கொண்ட, அதற்காக அர்ப்பணிப்புடன் நிற்கின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரே நிறுவனமாக செயற்படுவதுடன், அளவையியல் மற்றும் படமாக்கல் தொடர்பில் உயர் தரத்தில் கல்வி மற்றும் அனுபவத்தையும் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இந்நிறுவனமானது, 1969 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. 1990.07.04 ஆம் திகதியிலான விசேட வர்த்தமானி அறிக்கையில் அளவையியல் விஞ்ஞானம் தொடர்பிலான பட்டத்தை வழங்கக் கூடிய நிறுவனமாக 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் இந்நிறுவனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் நோக்கமாக ஆசிய வலயத்தில் புவியியல் தகவல்கள் தொடர்பிலான கல்வியின் கேந்திர நிலையமாக விளங்கிச் செயற்பட்டு வருகின்ற அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் மூலம் தற்போது, அளவையியல் விஞ்ஞானம் தொடர்பான 4 வருட பட்டப் படிப்பு மற்றும் உயர் டிப்ளோமாப் பாடநெறி, படமாக்கல் விஞ்ஞானம், தொலை தூர ஒளிப்படப்பிடிப்புத் தொழில்நுட்பம், வானியல் புகைப்பட ரேகையியல், நிலப்படத்தை (புலப்படம்) நிற அச்சீட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அச்சிடுதல், லித்தோ அச்சிடுதல் தொழில் தொழில்நுட்பம் தொடர்பிலான இரு வருட உயர் டிப்ளோமா பாடநெறி மற்றும் நில அளவைத் துறைக்கான உதவியாளர்களுக்கான தேசிய தொழில்சார் தகைமையைப் பெற்றுக்கொடுத்தல் (NVQ 2,3 மட்டங்கள்) ஆகிய பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

அதேபோன்று, திணைக்களத்தின் தொழில்நுட்ப அலுவலர் சபையின் திறமைகள் மற்றும் அறிவினை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழிற்றுறை அபிவிருத்திப் பாடநெறிகளும் ஆண்டுதோறும் தொடர்ந்தேர்ச்சியாக இந்நிறுவனத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

இவற்றிற்கு மேலதிகமாக அரசாங்கத்தினதும் பிற அரை அரசு நிறுவனங்களினதும் (Semi Government Organizations) வேண்டுகோளின்படி, தொழில்நுட்பவியல் பணிக்குழுவினருக்கான மற்றும் அளத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக கல்வி நிலையங்களின் சிவில் பொறியியல் துறை மாணவர்களுக்கான அளத்தல் முகாம்கள் எனும் பெயரில் உள்ள செயன்முறைப் பயிற்சி வேலைத்திட்டங்களை ஏற்பாடுசெய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

செயலாற்றுகை தொடர்பான விபரங்களுக்கு தயவு செய்து இணைப்பு iii ஐப் பார்க்கவும்.

## 2.0 **முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்குகள்**

- **விசேட பணிகள்**

நில அளவீட்டு நடவடிக்கைகள் மற்றும் படமாக்கல் தொடர்பாக தேசிய தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொறுப்பானது இலங்கை நில அளவைத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எமது நாட்டிற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் இடம்பெறாமையினால் 2025 ஆம் ஆண்டில் பதவியணி பற்றாக்குறைக்கு முகங்கொடுத்தாலும் வருடாந்த அளவீட்டு இலக்கிற்கு அமைய 122.51% முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியுமானதாக இருந்தது.

இவ் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட நில அளவீடுகளில் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொடைப் பத்திரங்கள் வழங்குவதல் மற்றும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குத்தகைக் கொடைப் பத்திரங்களை வழங்குவதற்காக காணித் துண்டங்கள் 43,110 உம், உரித்துப் பதிவு செய்யும் சட்டத்தின் கீன் உரித்துச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக காணித் துண்டங்கள் 90,563 உம், காணிகளைச் சுவீகரிக்கும் சட்டத்தின் கீழ் பொது மக்களின் தேவைப்பாடுகளுக்காக காணித் துண்டுகள் 2,893 உம், நீதிமன்றத்தின் மூலம் வெளியிடப்படுகின்ற நீதிமன்ற ஆணைக்குழுவின் நில அளவைகள் 782 உம், முன்மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்கான பொறியியல் அளவீடுகள் 98.8 ஹெக்டயரும், பல்வேறு தேவைப்பாடுகளுக்காக கோரிக்கை முன்வைக்கப்பட்ட அளவீடுகளுக்காக துண்டுகள் 24,832 ஆகிவைற்றை நிறைவேற்றுவதற்கு முடியுமானதாக உள்ளது.

இதற்கு மேலதிகமாக பல்வேறு நிறுவனங்களுக்காக வரைபடங்களை வழங்குதல், எண்மத் தரவுகளை வழங்குதல், வான்வழிப் புகைப்படங்கள் வழங்குதல் என்பன தேவைக்கு ஏற்ப வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- **சவால்கள்**

புவிசார் தகவல்கள் மற்றும் காணித் தகவல்களின் முகாமைத்துவத்திற்காக தரவு முறைமையை அபிவிருத்தி செய்து அதனை இற்றைப்படுத்தி வினைத்திறனாக பயன்படுத்துதல்.

தேசிய தேவைப்பாடுகளுக்கு அமைய முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு அனர்த்த முகாமைத்துவங்களை முன்னெடுப்பதற்கு அவசியமான நில அளவீடுகள் மற்றும் தரவுகளை நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி துரிதமாக வழங்குவதற்கு அவசியமான பணிகளை முன்னெடுத்தல்.

- **எதிர்கால நோக்கு**

அரசாங்கத்தின் காணி முகாமைத்துவம் மற்றும் அடிக்கடி அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு உதவுகின்ற விதமாக காணித் தகவல் முறைமை ஒன்றை நிறுவி நடாத்திச் செல்வதும், ஏனைய தரப்பினர்களுடன் தரவுகளை பரிமாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும், குறைந்த காலப் பகுதியில் பல்வேறு நில அளவீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் மக்களிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்தல், புவிசார் தகவல்கள் மற்றும் காணி முகாமைத்துவ துறைகளில் தற்காலத்தில் நிலவுகின்ற உயர் கல்விக்கான கேள்வியானது அளவையிலும் படமாக்கலும் நிறுவனத்தின் மூலம் அப்பட்டப் படிப்பை அமுல்படுத்துவதன் மூலம் இயன்றளவு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், காணி முகாமைத்துவத்திற்கு அவசியமான புவி சார் தகவல்கள் மற்றும் காணித் தகவல்களை வளைத்தள சேவைகளின் ஊடாக பிற நிறுவனங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# 3.0 ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை

ஏசீஏ-எவ்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| மதிப்பீடு 2025 | | குறிப்பு | உண்மையான நிலை 2025 | உண்மையான நிலை 2021 | |
|---|---|---|---|---|---|
| - | வருமான பெறுகைகள் | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியல்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 426,253,577 | 422,323,377 | ஏசீஏ-1 |
| 400,000,000 | மொத்த வருமான பெறுகைகள் (அ) | | 426,253,577 | 422,323,377 | |
| | வருமானமற்ற பெறுகைகள் | | | | |
| - | திறைசேரி ஏற்பாடுகள் | | 5,206,285,037 | 5,165,115,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 134,675,795 | 123,262,362 | ஏசீஏ-4 |
| 135,000,000 | முற்பணக் கணக்குகள் | | 168,915,272 | 163,863,456 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கின் பெறுகைகள் | | 122,531,619 | 71,107,770 | |
| - | மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ) | | 5,632,407,723 | 5,527,368,507 | |
| - | மொத்த வருமானம் பெறுகைகளும் வருமானமல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 6,058,661,300 | 5,949,691,884 | |
| | திறைசேரிக்கான ஒப்படைப்பு (ஈ) | | 448,654,712 | 551,488,699 | |
| | தேறிய வருமானம் பெறுகைகள் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள் உ = (இ)-(ஈ) | | 5,610,006,588 | 5,398,203,185 | |
| | கழி - செலவினம் | | | | |
| | மீண்டெழும் செலவினம் | | - | - | |
| 4,227,760,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் கொடுப்பனவுகள் | 5 | 4,176,828,176 | 3,779,070,161 | ஏசீஏ-2(i) |
| 810,689,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 655,444,952 | 648,529,667 | ஏசீஏ-2(i) |
| 19,250,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 12,289,061 | 14,193,130 | ஏசீஏ-2(i) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(i) |
| 300,000 | ஏனைய மீண்டெழும் செலவினம் | 9 | 5,000 | 1,661,318 | ஏசீஏ-2(i) |
| 5,058,000,000 | மொத்த மீண்டெழும் செலவினம் (ஊ) | | 4,844,567,189 | 4,443,454,276 | |
| | மூலதனச் செலவினம் | | | | |
| 242,000,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு, மேம்படுத்தல் | 10 | 171,092,384 | 269,915,697 | ஏசீஏ-2(ii) |
| 136,299,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 88,056,347 | 35,891,066 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 14,000,000 | ஆளணி விருத்தி | 14 | 5,671,518 | 11,665,413 | ஏசீஏ-2(ii) |
| 116,250,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 1,247,227 | 40,952,654 | ஏசீஏ-2(ii) |
| 508,549,000 | மொத்த மூலதனச் செலவினம் (எ) | | 266,092,477 | 358,414,830 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 126,693,724 | 91,762,612 | ஏசீஏ-4 |
| 330,100,000 | முற்பணக் கொடுப்பனவுகள் | | 238,757,277 | 219,577,093 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | 119,811,160 | 77,724,875 | |
| | மொத்தப்பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 485,262,161 | 389,134,570 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 5,595,921,826 | 5,191,053,636 | |
| | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | 14,084,762 | 207,149,559 | |
| | பணிப்புறுப்பான சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | 14,084,762 | 198,527,625 | ஏசீஏ-7 |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறான பணிப்புறுப்பான மீதி | | - | 8,621,924 | ஏசீஏ-3 |
| | | | 14,084,762 | 207,149,559 | |

122

## 3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசிஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | உண்மை நிலை 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அல்லாத** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசிஏ-6 | 11,298,803,349 | 11,211,395,621 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசிஏ-5/5அ | 467,206,804 | 397,364,799 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசிஏ-3 | - | 8,621,934 |
| மொத்த சொத்துக்கள் | | 11,766,010,153 | 11,617,382,354 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திரண்டெழுந்த தேறிய சொத்துக்கள் | | 407,356,939 | 335,497,006 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 11,298,803,349 | 11,211,395,621 |
| வாடகை மற்றும் பண் முற்பண ஒதுக்கம் | ஏசிஏ-5ஆ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசிஏ-4 | 59,849,865 | 61,867,794 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசிஏ-3 | - | 8,621,934 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 11,766,010,153 | 11,617,382,354 |

பக்க இலக்கம் 127 முதல் 162 வரை ஏசிஏ 1 முதல் ஏசிஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/இணைப்புகளின் பக்க இலக்கம் 164 முதல் 185 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிர்வாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிர்வாகத் தொகுதியொன்று அமைக்கப்பட்டு நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிர்வாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அமைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ........................ | ........................ | ........................ |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : 2026-02-24 | திகதி : 2026/02/24 | திகதி : 2026-02-24 |
| D.P. Wickramasinghe<br>Secretary<br>Ministry of Agriculture, Livestock, Land and Irrigation<br>"Mihikatha Medura" Land Secretariat<br>No. 1200/6, Rajamalwatta Avenue,<br>Battaramulla | P.K.L.S. Panduwawala<br>Surveyor General<br>Surveyor General's Office<br>Colombo 05. | I. P. Kothalawala<br>Director (Finance)<br>Survey Department<br>Colombo 05. |

123

## 3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- 5

### 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 426,253,577 | 422,323,377 |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 260,539,419 | 221,342,576 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 5,216,295,038 | 5,166,115,008 |
| முற்பணங்களை அறவிடல் | 167,164,285 | 161,932,666 |
| வைப்புக்களின் பெறுகை | 124,675,795 | 127,282,362 |
| மதிப்புச்சார்பு வரி | 96,971,819 | 71,107,770 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ) | 6,291,999,934 | 6,170,103,750 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | | |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 4,822,768,257 | 4,413,841,903 |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்புக்கு மூலதன மாற்றங்களுக்கு திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | 12,289,051 | 15,854,458 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 289,145,693 | 452,613,089 |
| திறைசேரிக்குத் திருப்பப்பட்ட பணம் | 440,012,779 | 551,488,699 |
| முற்பணக் கொடுப்பனவு | 241,782,032 | 215,941,310 |
| வைப்புக் கொடுப்பனவு | 126,693,724 | 91,762,602 |
| மதிப்புச்சார்பு வரி | 119,811,160 | 75,744,875 |
| தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ) | 6,230,538,826 | 5,804,246,936 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ) | 61,361,108 | 365,856,814 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | | |
| பங்கு இலாபம் | | |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதிக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | 17,350 | 1,179,950 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | 17,350 | 1,179,950 |
| கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு | - | |
| மூலதனச் சொத்துகளின் நிர்மாணம் கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | 86,928,258 | 358,414,850 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | 86,928,258 | 358,414,850 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | (86,910,908) | (357,234,900) |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ) | (25,549,800) | 8,621,934 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்நாட்டுக் கடன்கள் | | |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | 25,549,800 | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | 25,549,800 | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| உள்நாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | | |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ) | 25,545,800 | |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ) | | |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | - | 8,621,934 |
| டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | - | - |

124

3.4 **நிதிக் கூற்றுக் குறிப்புகள்**

பின்வரும் குறிப்புகள் 2025 நிதிக் கூற்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு (i) – இழப்புகள் மற்றும் கைவிடுகை தொடர்பான கூற்று (நி.பி. 106 மற்றும் 113 இன் கீழான இழப்புகள்)

குறிப்பு (ii) – புத்தகங்களில் இருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்று (ஆண்டில் இடம்பெற்ற நி.பி. 109 இன் கீழான இழப்புகள் மற்றும் கைவிடுகைகள் தொடர்பான கூற்று மற்றும் ஆண்டில் நி.பி. 109 இன் கீழான புத்தகங்களில் இருந்தான பதிவழித்தல்கள் மற்றும் அறவீடுகள் தொடர்பான கூற்று)

குறிப்பு (iii) – டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று

குறிப்பு (viii) – 2015/10/23 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரி தொழிற்பாட்டு சுற்றறிக்கை இலக்கம் 2015/03 இல் குறிப்பிட்டுள்ள ஆலோசனைகளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்குகள் தொடர்பான 2025/12/31 ஆம் திகதிக்கு இருப்பு நிலை அறிக்கை.

குறிப்பு (ix) – CIGAS மேசைக் கணினிப் பிரயோகி மூலம் உருவாக்கப்பட்ட நிலுவை தேர்வாய்வு மற்றும் புதிய CIGAS வலைத்தள பிரயோகி முறைமை மூலம் பெற்றுக் கொண்ட இறுதி திறைசேறி கணக்குக் கூற்று.

3.5 **வருமான சேகரிப்புச் செயலாற்றுகை**

| **வருமானக் குறியீடு** | **வருமானக் குறியீட்டின் விபரம்** | **வருமான மதிப்பீடு** | | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | |
|---|---|---|---|---|---|
| | | **அசல் மதிப்பீடு** | **இறுதி மதிப்பீடு** | **தொகை (ரூபா)** | **இறுதி வருமான மதிப்பீடு விகிதாசாரத்தில்** |
| 2003.02.04 | நில அளவை நாயகத்தின் வருமானம் | 400,000,000 | 400,000,000 | 426,253,577 | 107 |

3.6 **ஒதுக்கப்பட்ட மானியங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கான செயலாற்றுகை**

| **ஒதுக்கீட்டு வகை** | **ஒதுக்கீடு** | | **உண்மையான செலவீனம்** | **இறுதி ஒதுக்கீட்டின் ஒதுக்கீட்டுப் பயன்பாடு** |
|---|---|---|---|---|
| | **அசல்** | **இறுதி** | | |
| **மீண்டுவரும் செலவினங்கள்** | | | | |
| நிகழ்ச்சித் திட்டம் (1)<br>செயற்திட்டம் (1) | | | | |
| **தனிப்பட்ட சம்பளம்** | | | | |
| 1001 சம்பளம் மற்றும் ஊதியம் | 123,500,000 | 152,000,000 | 151,173,168 | 0.54 |
| 1002 மேலதிக நேரத்திற்கான மற்றும் விடுமுறைக்கான சம்பளம் | 2,500,000 | 5,500,000 | 4,719,866 | 14.18 |
| 1003 பிற கொடுப்பனவுகள் | 95,000,000 | 76,000,000 | 76,000,000 | 0.00 |
| | 221,000,000 | 233,500,000 | 231,893,034 | |
| **பயணச் செலவுகள்** | | | | |
| 1101 உள்நாடு | 1,000,000 | 1,000,000 | 522,380 | 47.76 |
| 1102 வெளிநாடு | 3,000,000 | 3,000,000 | 1,947,743 | 35.08 |
| **கூட்டுத்தொகை** (அ) | 4,000,000 | 4,000,000 | 2,470,123 | |
| **விநியோகம்** | | | | |
| 1201 காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 7,000,000 | 7,000,000 | 3,145,742 | 55.06 |
| 1202 எரிபொருள் | 13,000,000 | 13,000,000 | 11,666,276 | 10.26 |
| 1203 உணவு, பானம் மற்றும் சீருடைகள் | 100,000 | 100,000 | 92,000 | 8.00 |
| 1205 மற்றவை | 5,000,000 | 5,000,000 | 2,661,787 | 46.76 |
| **கூட்டுத்தொகை** (ஆ) | 25,100,000 | 25,100,000 | 17,565,805 | |

| | | | | |
|---|---|---|---|---|
| **<u>பராமரிப்பு செலவுகள்</u>** | | | | |
| 1301 வாகனங்கள் | 5,000,000 | 5,000,000 | 3,624,753 | 27.50 |
| 1302 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 2,000,000 | 2,000,000 | 1,337,929 | 33.10 |
| 1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 1,000,000 | - | - | 0.00 |
| 1304 மென்பொருள் பராமரிப்பு | 4,600,000 | 4,600,000 | 945,572 | 79.44 |
| **கூட்டுத்தொகை (இ)** | 12,600,000 | 11,600,000 | 5,908,254 | |
| **<u>சேவைகள்</u>** | | | | |
| 1401 போக்குவரத்து | 10,200,000 | 10,200,000 | 9,522,581 | 6.64 |
| 1402 அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 7,000,000 | 7,000,000 | 6,938,880 | 0.87 |
| 1403 மின்சாரம் மற்றும் நீர் | 33,000,000 | 30,500,000 | 28,284,301 | 7.26 |
| 1404 வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும் | 7,500,000 | 2,500,000 | 2,500,000 | 0.00 |
| 1405 சுத்தம் செய்தல் மற்றும் துப்புறவுச் சேவைகள் | 12,000,000 | 9,000,000 | 6,866,115 | 23.71 |
| 1407 பாதுகாப்புச் சேவை | 11,500,000 | 11,500,000 | 10,857,715 | 5.59 |
| 1409 மற்றவை | 22,500,000 | 22,500,000 | 19,023,300 | 15.45 |
| **கூட்டுத்தொகை (ஈ)** | 103,700,000 | 93,200,000 | 83,992,892 | |
| **<u>இடமாற்றங்கள்</u>** | | | | |
| 1506 அரச ஊழியர்களுக்கான சொத்து கடன் வட்டி | 3,300,000 | 2,300,000 | 1,826,325 | 20.59 |
| **கூட்டுத்தொகை** | 3,300,000 | 2,300,000 | 1,826,325 | |
| **<u>பிற மீண்டுவரும் செலவினங்கள்</u>** | | | | |
| 1703 அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல். | 300,000 | 300,000 | 5,000 | 98.33 |
| **கூட்டுத்தொகை** | 300,000 | 300,000 | 5,000 | |
| <u>நிகழ்ச்சித் திட்டம் (1)</u> மொத்த மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத்தொகை (குறிப்பு 5 – 9) | 370,000,000 | 370,000,000 | 343,661,433 | |

| | | | | |
|---|---|---|---|---|
| **மூலதன செலவினங்கள்** | | | | |
| நிகழ்ச்சித் திட்டம் (1) | | | | |
| **மூலதன சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடுகள்** | | | | |
| 2001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 50,000,000 | 50,000,000 | 25,541,403 | 48.92 |
| 2002 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 15,000,000 | 15,000,000 | 8,094,864 | 46.03 |
| 2003 வாகனங்கள் | 15,000,000 | 15,000,000 | 8,216,127 | 45.23 |
| **கூட்டுத்தொகை** (**அ**) | 80,000,000 | 80,000,000 | 41,852,394 | |
| **மூலதன சொத்துக்களைக் கையகப்படுத்துதல்** | | | | |
| 2102 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 5,000,000 | 30,549,800 | 29,888,550 | 2.16 |
| 2103 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 20,000,000 | 20,000,000 | 10,581,253 | 47.09 |
| 2106 மென்பொருள் அபிவிருத்தி | 50,000,000 | 50,000,000 | 26,751,179 | 46.50 |
| **கூட்டுத்தொகை** (**ஆ**) | 75,000,000 | 100,549,800 | 67,220,982 | |
| **திறன் மேம்பாடு** | | | | |
| 2401 பதவியணிப் பயிற்சிகள் | 10,000,000 | 10,000,000 | 1,990,222 | 80.10 |
| **கூட்டுத் தொகை** (**உ**) | 10,000,000 | 10,000,000 | 1,990,222 | |
| **ஏனைய மூலதனச் செலவினங்கள்** | | | | |
| 2509 மற்றவை | 10,000,000 | 10,000,000 | 616,000 | 93.84 |
| **கூட்டுத்தொகை** (**ஊ**) | 10,000,000 | 10,000,000 | 616,000 | |
| நிகழ்ச்சித் திட்டம் (1)<br>**அரச நிறுவனத்தின் மொத்தச் செலவினம்** (**அ**+ **ஆ**+ **இ**+ **ஈ**+ **உ**+ **ஊ**) | 175,000,000 | 200,549,800 | 111,679,597 | 44.31 |
| **மொத்த செலவினங்களின் கூட்டுத்தொகை** (**குறிப்பு** 5 – 15) | 545,000,000 | 570,549,800 | 455,341,030 | 20.19 |

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவீனம் | இறுதி ஒதுக்கீட்டின் ஒதுக்கீட்டுப் பயன்பாடு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | அசல் | இறுதி | | |
| <u>**மீண்டுவரும் செலவினங்கள்**</u> | | | | |
| <u>நிகழ்ச்சித் திட்டம் 02</u> | | | | |
| செயற்திட்டம் 02 | | | | |
| <u>**தனிப்பட்ட சம்பளம்**</u> | | | | |
| 1001 சம்பளம் மற்றும் ஊதியம் | 1,958,000,000 | 2,488,575,000 | 2,453,657,712 | 1.40 |
| 1002 மேலதிக நேரத்திற்கான மற்றும் விடுமுறைக்கான சம்பளம் | 12,000,000 | 18,762,200 | 17,800,755 | 5.12 |
| 1003 பிற கொடுப்பனவுகள் | 1,846,000,000 | 1,371,423,000 | 1,358,496,728 | 0.94 |
| | 3,816,000,000 | 3,878,760,200 | 3,829,955,195 | |
| **செலவின விடத்திற்கு அமைய வகைப்படுத்தப்பட்ட ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்** | | | | |
| <u>**பயணச் செலவுகள்**</u> | | | | |
| 1101 உள்நாடு | 140,000,000 | 120,350,000 | 101,631,666 | 15.55 |
| **கூட்டுத்தொகை (அ)** | 140,000,000 | 120,350,000 | 101,631,666 | |
| <u>**விநியோகம்**</u> | | | | |
| 1201 காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 42,000,000 | 42,000,000 | 38,413,035 | 8.54 |
| 1202 எரிபொருள் | 132,000,000 | 112,475,000 | 87,326,801 | 22.36 |
| 1203 உணவு, பானம் மற்றும் சீருடைகள் | 1,100,000 | 1,100,000 | 1,100,000 | 0.00 |
| 1205 மற்றவை | 30,000,000 | 30,000,000 | 27,713,116 | 7.62 |
| **கூட்டுத்தொகை (ஆ)** | 205,100,000 | 185,575,000 | 154,552,952 | |

| | | | | |
|---|---|---|---|---|
| <u>**பராமரிப்பு செலவுகள்**</u> | | | | |
| 1301 வாகனங்கள் | 55,000,000 | 51,650,000 | 49,382,665 | 4.39 |
| 1302 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 14,000,000 | 14,000,000 | 10,665,482 | 23.82 |
| 1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 6,300,000 | 6,300,000 | 4,850,863 | 23.00 |
| 1304 மென்பொருள் பராமரிப்பு | 6,000,000 | 6,000,000 | - | 100.00 |
| **கூட்டுத்தொகை (இ)** | 81,300,000 | 77,950,000 | 64,899,010 | |
| <u>**சேவைகள்**</u> | | | | |
| 1401 போக்குவரத்து | 38,000,000 | 38,000,000 | 33,671,935 | 11.39 |
| 1402 அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 40,000,000 | 40,000,000 | 36,620,650 | 8.45 |
| 1403 மின்சாரம் மற்றும் நீர் | 26,000,000 | 26,000,000 | 19,001,020 | 26.92 |
| 1404 வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும் | 95,000,000 | 84,558,200 | 53,864,427 | 36.30 |
| 1405 சுத்தம் செய்தல் மற்றும் துப்புறவுச் சேவைகள் | 17,600,000 | 16,200,000 | 13,963,708 | 13.80 |
| 1407 பாதுகாப்புச் சேவை | 51,000,000 | 43,656,600 | 30,605,233 | 29.90 |
| 1409 மற்றவை | 17,000,000 | 17,000,000 | 11,653,802 | 31.45 |
| **கூட்டுத்தொகை (ஈ)** | 284,600,000 | 265,414,800 | 199,380,775 | |
| <u>**இடமாற்றங்கள்**</u> | | - | | |
| 1505 சந்தா மற்றும் இணக்கப் பணம் | 3,000,000 | 3,000,000 | 609,492 | 79.68 |
| 1506 அரச ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி | 15,000,000 | 13,950,000 | 9,853,234 | 29.37 |
| கூட்டுத்தொகை | 18,000,000 | 16,950,000 | 10,462,726 | |
| நிகழ்ச்சித் திட்டம் (2) செயற்திட்டம் (2) | | | | |
| மொத்த மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத்தொகை (குறிப்பு 5- 9) | 4,545,000,000 | 4,545,000,000 | 4,360,882,324 | |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதன செலவினங்கள் | | | | |
| நிகழ்ச்சித் திட்டம் (2) செயற்திட்டம் (2) | | | | |
| மூலதன சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடுகள் | | | | |
| 2001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 100,000,000 | 100,000,000 | 79,327,891 | 20.67 |
| 2002 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 15,000,000 | 15,000,000 | 6,580,710 | 56.13 |
| 2003 வாகனங்கள் | 35,000,000 | 35,000,000 | 31,414,636 | 10.24 |
| **கூட்டுத்தொகை** (அ) | 150,000,000 | 150,000,000 | 117,323,237 | |
| **<u>மூலதன சொத்துக்களைக் கையகப்படுத்துதல்</u>** | | | | |
| 2101 வாகனங்கள் | - | - | - | - |
| 2102 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 15,000,000 | 15,000,000 | 11,735,918 | 21.76 |
| 2103 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 15,000,000 | 15,000,000 | 8,402,474 | 43.98 |
| **கூட்டுத்தொகை** (ஆ) | 30,000,000 | 30,0000,000 | 20,138,392 | |
| **<u>திறன் மேம்பாடு</u>** | | | | |
| 2401 பதவியணிப் பயிற்சிகள் | 2,000,000 | 2,000,000 | 1,891,564 | 5.42 |
| **கூட்டுத்தொகை** (இ) | 2,000,000 | 2,000,000 | 1,891,564 | |
| **<u>ஏனைய மூலதனச் செலவினங்கள்</u>** | | | | |
| 2509 - 11 மற்றவை | 1,000,000 | 1,000,000 | - | 100.00 |
| 2509 - 12 மற்றவை | 400,000,000 | 400,000,000 | - | 100.00 |
| 2509 - 17 மற்றவை | 5,000,000 | 5,000,000 | 422,839 | |
| **கூட்டுத் தொகை** (ஈ) | 406,000,000 | 406,000,000 | 422,839 | |
| <u>நிகழ்ச்சித் திட்டம் (2) செயற்திட்டம் (2)</u> | | | | |
| **அரச முதலீடுகளின் மொத்த செலவினம்** (**அ** + **ஆ**+ **இ**+ **ஈ**+ **உ**+ **ஊ**) | 588,0000,000 | 588,000,000 | 139,776,030 | 76.23 |
| **மொத்த செலவினங்களின் கூட்டுத்தொகை** (**குறிப்பு** 5 – 15) | 5,133,000,000 | 5,133,000,000 | 4,500,658,356 | 12.32 |

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவீனம் | இறுதி ஒதுக்கீட்டின் ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் | இறுதி | | |
| நிகழ்ச்சித் திட்டம் 02 | | | | |
| செயற்திட்டம் 03 | | | | |
| தனிப்பட்ட சம்பளம் | | | | |
| 1001 சம்பளம் மற்றும் ஊதியம் | 60,700,000 | 69,200,000 | 68,713,825 | 0.70 |
| 1002 மேலதிக நேரத்திற்கான மற்றும் விடுமுறைக்கான சம்பளம் | 500,000 | 500,000 | 500,000 | 0.00 |
| 1003 பிற கொடுப்பனவுகள் | 50,000,000 | 45,800,000 | 45,766,123 | 0.07 |
| | 111,200,000 | 115,500,000 | 114,979,948 | |
| பயணச் செலவுகள் | | | | |
| 1101 உள்நாடு | 500,000 | 500,000 | 499,460 | 0.11 |
| கூட்டுத்தொகை (அ) | 500,000 | 500,000 | 499,460 | |
| விநியோகம் | | | | |
| 1201 காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 1,300,000 | 1,300,000 | 1,096,553 | 15.65 |
| 1202 எரிபொருள் | 6,050,000 | 4,550,000 | 4,038,175 | 11.25 |
| 1203 உணவு, பானம் மற்றும் சீருடைகள் | 100,000 | 100,000 | 40,000 | 60.00 |
| 1205 மற்றவை | 1,000,000 | 1,000,000 | 936,944 | 6.31 |
| கூட்டுத்தொகை (ஆ) | 8,450,000 | 6,950,000 | 6,111,672 | |
| பராமரிப்பு செலவுகள் | | | | |
| 1301 வாகனங்கள் | 800,000 | 800,000 | 697,849 | 12.77 |
| 1302 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 1,500,000 | 1,500,000 | 1,440,688 | 3.95 |
| 1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 450,000 | 450,000 | 174,162 | 61.30 |
| 1304 மென்பொருள் பராமரிப்பு | 400,000 | 400,000 | 370,000 | 7.50 |
| கூட்டுத் தொகை (இ) | 3,150,000 | 3,150,000 | 2,682,699 | |
| சேவைகள் | | | | |
| 1401 போக்குவரத்து | 5,000,000 | 3,400,000 | 3,400,000 | 0.00 |
| 1402 அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 1,400,000 | 1,400,000 | 995,685 | 28.88 |
| 1403 மின்சாரம் மற்றும் நீர் | 2,500,000 | 2,500,000 | 2,391,212 | 4.35 |
| 1404 குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வரி | - | - | - | |
| 1405 சுத்தம் செய்தல் மற்றும் துப்புறவுச் சேவைகள் | 6,000,000 | 4,800,000 | 4,398,984 | 8.35 |
| 1407 பாதுகாப்புச் சேவை | 4,000,000 | 4,000,000 | 3,932,420 | 1.69 |
| 1409 மற்றவை | 800,000 | 800,000 | 631,353 | 21.08 |
| கூட்டுத்தொகை (ஈ) | 19,700,000 | 16,900,000 | 15,749,654 | |

| | | | | |
|---|---|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் (2) செயற்திட்டம் (3) | | | | |
| மொத்த மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத்தொகை (குறிப்பு 5- 9) | 143,000,000 | 143,000,000 | 140,023,433 | 143,000,000 |
| **மூலதன செலவினங்கள்** | | | | |
| நிகழ்ச்சித் திட்டம் (2) செயற்திட்டம் (3) | | | | |
| மூலதன சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடுகள் | | - | | |
| 2001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 10,000,000 | 10,000,000 | 9,929,725 | 0.70 |
| 2002 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 1,400,000 | 1,400,000 | 1,385,530 | 1.03 |
| 2003 வாகனங்கள் | 600,000 | 600,000 | 586,500 | 2.25 |
| கூட்டுத் தொகை (அ) | 12,000,000 | 12,000,000 | 11,901,755 | |
| மூலதன சொத்துக்களைக் கையகப்படுத்துதல் | | | | |
| 2102 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 750,000 | 750,000 | 696,974 | 7.07 |
| 2103 பொறி மற்றும் இயந்திர உபகரணம் | 5,000,000 | 5,000,000 | - | 100.00 |
| கூட்டுத்தொகை (ஆ) | 5,750,000 | 5,750,000 | 696,974 | |
| திறன் மேம்பாடு | | | | |
| 2401 பதவியணிப் பயிற்சிகள் | 2,000,000 | 2,000,000 | 1,789,733 | 10.51 |
| கூட்டுத்தொகை (இ) | 2,000,000 | 2,000,000 | 1,789,733 | |
| ஏனைய மூலதனச் செலவினங்கள் | | | | |
| 2509 மற்றவை | 250,000 | 250,000 | 248,388 | 0.64 |
| கூட்டுத்தொகை (ஈ) | 250,000 | 250,000 | 248,388 | |
| நிகழ்ச்சித் திட்டம் (2) செயற்திட்டம் (2) | | | | |
| அரச முதலீடுகளின் மொத்த செலவினம் (அ + ஆ+ இ+ ஈ+ உ+ ஊ) | 20,000,000 | 20,000,000 | 14,636,850 | 26.82 |
| மொத்த செலவினங்களின் கூட்டுத்தொகை (குறிப்பு 5 – 15) | 163,000,000 | 163,000,000 | 154,660,283 | 5.12 |

3.7 **நிதிப் பிரமாணம்** 208 **இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட மானியங்கள்**

| **தொடர் இலக்கம்** | **ஒதுக்கீட்டினை வழங்கிய அமைச்சு / திணைக்களம்** | **ஒதுக்கீட்டை ஒதுக்கிதற்கான நோக்கம்** | **ஒதுக்கீடு** | **உண்மையான செலவினம்** | **இறுதி ஒதுக்கீட்டின் சதவீதமாக ஒதுக்கீட்டுப் பயன்பாடு** |
|---|---|---|---|---|---|
| 1. | காணி அமைச்சு | பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக | 535,000,000 | 206,976,851 | 39 |

3.8 **நிதி சார்பற்ற சொத்துக்களை அறிக்கையிடும் செயலாற்றுகை**

| **ஆதனக் குறியீடு** | **குறியீட்டு விபரம்** | 2025.12.31 **திகதிக்கான சுற்றாய்வுச் சபை அறிக்கைப் படி மீதி** | 2025.12.31 **திகதிக்கான நிதி நிலைமை அறிக்கைப் படி மீதி** | **எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது** | **அறிக்கையிடல் முன்னேற்ற வீதம் % ஆக** |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | - | 1,725,976,895.16 | - | - |
| 9152 | இயந்திரங்கள் மற்றும் உபகரணம் | - | 1,954,857,774.88 | - | - |
| 9153 | காணி | - | 7,591,217,500.00 | - | - |

3.9 **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

தயவுசெய்து *இணைப்பு iv* இனை பார்க்கவும்.

## 4.0 **செயலாற்றுகைச் சுட்டிகள்**

### 4.1 **நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்** ( **செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்**)

| **குறிப்பீட்டுச் சுட்டிகள்** | **எதிர்பார்த்த வெளியீட்டின் சத வீதமாக உண்மையான வெளியீடு** | | | | |
|---|---|---|---|---|---|
| | >100% | 100% - 90% | 89%-75% | 74% - 50% | 50%> |
| கொடைப் பத்திரங்கள் வழங்குவதற்காக முன்னெடுக்கப்படுகின்ற நியதிச்சட்ட நில அளவீடுகள். | | √ | | | |
| அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக காணிகளை சுவீகரிப்பதற்கான அளவீடுகள் | | | | | √ |
| பொறியியல் அளவீடுகள். | √ | | | | |
| பல்வேறு அளவீடுகள் | | √ | | | |
| நீதிமன்ற ஆணைக்குழுவின் நில அளவைகள் | | | √ | | |
| உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அளவீடுகள் | | √ | | | |
| 1 : 50,000 அளவிலான பிரதேசவியல் வரைபடங்களை விஞ்ஞான ரீதியில் மேம்படுத்தப்பட்ட இடவிளக்கவியல் வரைபடங்களைத் தயாரித்தல். | | √ | | | |
| 1: 10,000 அளவிலான வரைபடங்களை தயாரித்தல் | | √ | | | |
| 1: 10,000 அளவிலான பிரதேசவியல் வரைபடங்களை விஞ்ஞான ரீதியில் மேம்படுத்தப்பட்ட இடவிளக்கவியல் வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் பயனரின் கோரிக்கைக்கு அமைய அச்சிடுதல். | | √ | | | |
| பல்வேறு நிர்வாக அலகுகளுக்காக வபைடங்களைத் தயாரித்தல். | | | √ | | |
| ஆய்வுப் பொருள்சார் படங்களைத் தயாரித்தல் | √ | | | | |
| வாடிக்கையாளர்களின் கோரிக்கைக்கு அமைய தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் | √ | | | | |
| எண்ம புவியியல்சார் தரவுகளை வெளியிடுதல். | √ | | | | |
| வன் பிரதி வரைபடங்கள் மற்றும் வரைபடங்களை Flex ஊடகத்தில் வெளியிடுதல். | √ | | | | |
| நிலப்படங்களின் பிரதிகளை வழங்குதல் | √ | | | | |
| திணைக்களத்தினுள் பரீட்சைகளை நடாத்துதல் | | √ | | | |
| காணித் தகவல் முறைமையை இற்றைப்படுத்துதல். | | √ | | | |
| காணித் தகவல் முறைமையின் தரவுகளை நிகழ்நிலை சேவையின் மூலம் வழங்குதல். | √ | | | | |
| 1:50000 அளவிலான பிரதேசவியல் தரவு முறைமையை இற்றைப்படுத்துதல். | √ | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1:50000 அளவிலான தொடர்ச்சியான பிரதேசவியல் தரவு முறைமையைத் தயாரித்தல். | √ | | | | |
| 1:10000 அளவிலான பிரதேசவியல் தரவு முறைமையை இற்றைப்படுத்துதல். | √ | | | | |
| 1:10000 அளவிலான தொடர்ச்சியான பிரதேசவியல் தரவு முறைமையை இற்றைப்படுத்துதல். | √ | | | | |
| புவிசார் தரவுக் களஞ்சியத்தின் தரவுகளை Online சேவையின் மூலம் வழங்குதல். | √ | | | | |
| வான்வழிப் புகைப்படங்களை Scanning செய்து வெளியிடுதல். | √ | | | | |
| தற்பொழுதுள்ள புவியியல் பெயரீடுகளை மக்களின் கருத்துக்களுக்கு அமைய மீண்டும் தரநிர்ணயம் செய்தல் | √ | | | | |
| சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் புவியியல் பெயரீட்டுத் தரவுக் களஞ்சியம் ஒன்றை நடாத்திச் செல்லுதல். | | √ | | | |
| உத்தியோகபூர்வ மொழியைத் தவிர உரோம மயப்படுத்தப்பட்ட பிரதிகளின் புவியியல் பெயரீடுகளை | | | | | √ |
| தேசிய மேற்கட்டமைப்பு முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் அதற்கு அவசியமான தரவுகளை வழங்குதல். | √ | | | | |
| திணைக்கள வலைத்தளத்தை இற்றைப்படுத்துதல். | √ | | | | |
| பொது மக்களின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு நிலைப்படுத்துதல். | √ | | | | |
| C வகை கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல். | √ | | | | |
| CORSNet வலையமைப்பை நடாத்திச் செல்லுதல் மற்றும் விரிவாக்குதல். | √ | | | | |
| பிற நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய C வகை கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுதல். | √ | | | | |
| தற்பொழுது நிலவுகின்ற நிலைகுத்துக் கட்டுப்பாட்டுப் புள்ளிகளின் கள விசாரணை/ பாதுகாத்தல் / மீள நிறுவுதல். | - | | | | |
| மதலாம் நிலை வகுதியின் மட்டக் கோடுகளை நிறுவுதல். | | | | | √ |
| இரண்டாம் நிலை வகை மட்டக் கோடுகளை நிறுவுதல். | | | | | √ |
| மூன்றாம் நிலை வகை மட்டக் கோடுகளை நிறுவுதல். | | | | | √ |
| பிற நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய இரண்டாம் நிலை வகுதியின்/ மூன்றாம் நிலை வகுதியின் மட்டக் கோடுகளை நிறுவுதல். | | | | | √ |
| வேறு விசேட அளவீடுகள் | | | | √ | |
| அளவையியல் மற்றும் படமாக்கல் நிறுவனத்தின் சட்டத்தை மறுசீரமைத்தல். | | | | | √ |
| நான்கு வருட நில அளவையியல் விஞ்ஞானமானி பட்டப் பாடநெறியை நடாத்திச் செல்லுதல். | | | | | √ |
| தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல். | | | | | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்களுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | | | | | √ |
| நில அளவை அத்தியட்சகர்களுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | | | | | √ |
| நில அளவையாளர்களுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | | | | | √ |
| தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்காக தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | | | | | √ |
| இலங்கை தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களுக்காக டிப்ளோமா நிகழ்ச்சித் | | | | | √ |
| ஒரு நாள் பாடநெறி திட்டங்களை நடாத்துதல். | | | | | √ |
| குறுகிய கால பாடநெறிகளை நடாத்துதல். | √ | | | | |

## 5.0 **நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை** (SDG) **அடையும் செயலாற்றுகை**

அபிவிருத்தி, முதலீடு மற்றும் விவசாய நோக்கங்களுக்காக தரவுகளை ஏற்பாடு செய்தல், விண்வெளி சார் தரவுப் பகுப்பாய்விற்காக வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் பதவியணியை சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குதல் போன்றவை நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளாக இனங்காணப்பட்டு உள்ளன.

### 5.1 **இனங் காணப்பட்ட நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள்**

| **இலக்கு / குறிக்கோள்** | **அடைவுகள்** | **குறிகாட்டிகள்** | **இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்** | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% -100% | >100% |
| அபிவிருத்தி, முதலீடு மற்றும் விவசாய நோக்கங்களுக்காக அளத்தல் தரவுகளை தயாரித்தல் | அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணி அளத்தல் மற்றும் தரவுக் களஞ்சியதைத் தயாரித்தல். | அளக்கப்பட்ட பிரதேசம் மற்றும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை | | | | √ |
| புவி சார் தரவுப் பகுப்பாய்வுக்காக வரைபடங்களைத் தயாரித்தல். | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வரைபடங்களைத் தயாரித்தல் | வரைபடம், தரவு முறைமைகளின் எண்ணிக்கை | | | | √ |
| பதவியணியை சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்காக அளத்தற் பயிற்சி | தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | பரீட்சை / பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை | | | √ | |

5.2 **நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை எட்டுதலுக்கான வெற்றிகள் மற்றும் சவால்கள்**

நிலைபெறுதகு அபிவிருத்தி உபாயங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அடிப்படைக் குறிக்கோள்கள் மூன்றின் கீழ் அதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன. அதற்கமைவாக நிலஅளவை தரவுகளைத் தயாரிப்பதில் 122.51% வீதத்தினை எட்டியுள்ளதுடன் வரைபடம் தயாரித்தலில் 96% செயலாற்றுகையும் மற்றும் பயிற்சி வழங்குதலில் 50% செயலாற்றுகையும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு எதிர்காலத்தில் திணைக்களத்திற்கு காணப்படுகின்ற பிரதான சவாலாக விளங்குவது பௌதிக வளப்பற்றாக்குறை மற்றும் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற தொழிநுட்ப வளர்ச்சிகளை எட்டுவதற்கு அவசியமான வளங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளமை மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம் என்பன ஆகும்.

6.0 **மனித வள வரைவாக்கம்**

திணைக்களத்தின் மனித வளம் தொடர்பான அமைப்பு, நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனித வள முகாமைத்துவப் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்குரிய ஏனைய நிறுவனங்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகள், பட்டப் பின் படிப்பு பாடநெறிகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பட்டறைகள் மூலம் செயலாற்றுகையை மேம்படுத்துதல்.

6.1 **பதவியணி முகாமைத்துவம்**

| | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை** | **தற்போதுள்ள பதவியணியின் எண்ணிக்கை** | **பதவி வெற்றிடம்** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 1144 | 834 | 310 |
| மூன்றாம் நிலை | 82 | 26 | 56 |
| இரண்டாம் நிலை | 1372 | 1044 | 328 |
| ஆரம்ப நிலை | 4890 | 3076 | 1814 |
| மொத்தம் | 7488 | 4980 | 2508 |

6.2 **நிறுவனத்தின் செயலாற்றுகையில் தாக்கம் செலுத்துகின்ற மனித வள பற்றாக்குறை மற்றும் நிர்வாகம்**.

இந்த திணைக்களத்தின் தொழில்நுட்ப நடவடிக்கைகள், பொதுவான அலுவலக நடவடிக்கைள் மற்றும் அந்த செயற்பாடுகளுடன் இணைந்த நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்ற பல்வேறு மட்டத்திலான உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாகும். அவற்றில் இலங்கை நில அளவையாளர்கள் சேவை, இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவை, இலங்கை தொழில்நுட்ப மற்றும் நிர்வாக சேவை, நில அளவைக் கள உதவியாளர் சேவை, இணைந்த சேவைகளுக்குரிய சாரதிகள் மற்றும் முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர்கள் பதவிகளில் கவனத்தில் கொள்ளப்படவேண்டியளவில் வெற்றிடங்கள் திணைக்களத்தினுள் காணப்படுகின்றன. அவ்வாறே, திணைக்களத்தின் பெறுமதி மிக்க வளமான நிலப்படங்களை உரிய தரத்தில் பேணுவதற்கு அவசியமான சேவைகளை வழங்குகின்ற நிலப்படங்களைப் புதுப்பிப்பவர்களுக்கான பற்றாக்குறை காரணமாக திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எதிர்மறையான தாக்கம் ஏற்ட்டுள்ளது. சாரதிகளுக்கான வெற்றிடங்களை ஏனைய சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திணைக்களத்திற்கு இணைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் நிலவினும் இணைக்கப்பட்ட ஊழியர்கள் மூலம் உரிய பணிகளை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலம் திணைக்களத்தின் கடமைப் பணிகளை கூடியளவு வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு முடியுமானதாக உள்ளது.

6.3 **மனித வள அபிவிருத்தி**

6.3.1 **பிற நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற பயிற்சிப் பாடநெறிகள்** (**உள்நாடு**)

| நிகழ்ச்சித் திட்டம் | அலுவலர்களின் எண்ணிக்கை | கால எல்லை (நாட்கள்) | மொத்த முதலீடு (ரூபா.) | பாடநெறியின் இயல்பு | | பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | | வெளிநாடு | உள்நாடு | |
| புதிய கொள்முதல் வழிகாட்டுதல்கள் பற்றிய கருத்தரங்கு | 01 | 01 | 14,000.00 | - | உள்நாடு | இதன் மூலம் கொள்வனவு நடவடிக்கைகள் பற்றிய அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது |
| புதிய பொது கொள்முதல் நடைமுறை | 01 | 01 | 14,000.00 | - | உள்நாடு | இதன் மூலம் கொள்வனவு நடவடிக்கைகள் பற்றிய அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது |
| புதிய பொது கொள்முதல் நடைமுறை | 01 | 01 | 14,000.00 | - | உள்நாடு | இதன் மூலம் கொள்வனவு நடவடிக்கைகள் பற்றிய அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது |
| Advance Excel பயிற்சிப் பட்டறை | 40 | 03 | 218,507.41 | - | உள்நாடு | இதிலிருந்து Advance Excel பற்றிய அறிவு பெறப்பட்டது. |
| 3 வது தடைகாண் பரீட்சை தொடர்பான குறுகிய கால பயிற்சி வகுப்புகள் SLSS-CPDP தரம் 1 உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை | 46 | 09 | 494,707.42 | - | உள்நாடு | வினைத்திறன் காண் தடைதாண்டலில் தேர்ச்சி பெறுவதற்கான அறிவு நிறைவடைந்துள்ளது. |
| சிசிடிவி நிறுவல் மற்றும் வலையமைப்புக் கேபிள் | 01 | 06 மாதங்கள் | 45,600.00 | - | உள்நாடு | இதன் மூலம் கணினி வலையமைப்பு பற்றிய அறிவு பெறப்பட்டது. |
| பொதுச் சொத்து முகாமைத்துவம் | 02 | 01 | 28,000.00 | - | உள்நாடு | இதன் மூலம் அரச சொத்து முகாமைத்துவம் பற்றிய அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது |
| வரைகலை வடிவமைப்பு மற்றும் படைப்பாற்றல் மேம்பாடு | 01 | 01 | 35,000.00 | - | உள்நாடு | இதன் மூலம் கிராஃபிக் வடிவமைப்பு மற்றும் படைப்பாற்றல் மேம்பாடு பற்றிய அறிவு பெறப்பட்டது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் இழப்புகள் மற்றும் சேதங்கள் | 01 | 01 | 6,500.00 | | உள்நாடு | நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் இழப்புகள் மற்றும் சேதங்கள் பற்றிய அறிவு இதன் மூலம் பெறப்பட்டது. |
| சாரதிகளுக்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 01 | 12,000.00 | | உள்நாடு | இதன் மூலம் சாரதியாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவு பெறப்பட்டது. |
| கொள்முதல் ஆவணங்கள் | 03 | 01 | 42,000.00 | | உள்நாடு | கொள்வனவு ஆவணங்கள் பற்றிய அறிவு பெறப்பட்டது |
| AI பயிற்சி திட்டம் | 67 | 01 | 8,000.00 | | உள்நாடு | செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு பற்றிய அடிப்படை அறிவு இதிலிருந்து பெறப்பட்டது. |
| நிர்வாக உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாடு | 01 | 03 | 18,000.00 | | உள்நாடு | இதன் ஊடாக நிர்வாக உத்தியோகத்தர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் பற்றிய அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது |
| தகவல் முறைமைகள் கணக்காய்வு | 10 | 01 | 125,000.00 | - | உள்நாடு | இதன் மூலம் தகவல் முறைமைகள் கணக்காய்வு பற்றிய அறிவு பெறப்பட்டது. |
| செலுத்த வேண்டிய வருமான வரியின் கணக்கீடு | 02 | 01 | 28,000.00 | - | உள்நாடு | செலுத்த வேண்டிய வருமான வரி கணக்கீடு பற்றிய அறிவு பெறப்பட்டது. |
| விலை மனுக்களை மதிப்பீடு செய்தல் | 02 | 01 | 28,000.00 | - | உள்நாடு | விலைமனு மதிப்பீடு பற்றிய அறிவு பெறப்பட்டது |
| முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி .உத்தியோகத்தர்களுக்கான தலைமை அலுவலகத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 45 | 01 | 8,400.00 | - | உள்நாடு | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் கடமைகள் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளல். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புவிசார் தகவல் முறைமை டிப்ளோமா பாடநெறி | 05 | 1 வருடம் | 400,000.00 | - | உள்நாடு | புவிசார் தகவல் முறைமை டிப்ளோமாவில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல். |
| வெள்ளம் சார்ந்த வரைபடம் | 30 | 02 | 36,000.00 | | உள்நாடு | வெள்ளப்பெருக்கு அடிப்படையிலான வரைபடம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல். |
| அலுவலக உற்பத்தித்திறனுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு பற்றிய சான்றிதழ் படிப்பு | 03 | 05 | 90,000.00 | - | உள்நாடு | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவைப் பெறுதல் |
| தேசிய தகவல் தொழில்நுட்ப மாநாடு 2025 | 01 | 02 | 30,000.00 | - | உள்நாடு | தகவல் தொழினுட்ப சேவைகள் தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது. |

6.3.2 **வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பயிற்சிப் பட்டறை**

| **நிகழ்ச்சித் திட்டம்** | **அலுவலர்களின் எண்ணிக்கை** | **கால எல்லை (நாட்கள்)** | **மொத்த முதலீடு (ரூபா.)** | **பாடநெறியின் இயல்பு** | **பெற்றுக்கொண்ட அறிவு** |
|---|---|---|---|---|---|
| Study Visit on One Disaster Data | 01 | 2025.02.25 - 2025.02.28 | - | வெளிநாடு | ஒரு பேரிடர் தரவு அமைப்பு பற்றி அறிய ஆய்வுப் பயணம் |
| Remote Sensing மற்றும் GIS இல் 29 வது முதுகலை பட்டம்(CSSTEAP) | 03 | 2025.07.01 - 2026.03.31 | - | வெளிநாடு | Remote Sensing மற்றும் புவியியல் தகவல் அமைப்பில் 29 வது முதுகலை பட்டப்படிப்பைப் படித்தல். |
| Application of space Technology in Flood Hazard Mitigation and Management | 03 | 2025.05.05 – 2025.05.16 | - | வெளிநாடு | வெள்ள இடர்களை மதிப்பிடுதல், குறைத்தல் மற்றும் நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு முறைமைகளை முகாமைத்துவம் செய்தல் என்பவற்றிற்கான செயற்கைக்கோள் தரவுகள் மற்றும் இடஞ்சார்ந்த தொழில்நுட்பம் பற்றிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மேம்பட்ட அறிவைப் பெற்றுக் கொள்ளுதல். |
| Spacetide 2025 and space 2 earth summit | 01 | 2025.07.07 – 2025.07.10 | - | வெளிநாடு | புவிசார் அறிவு, உட்கட்டமைப்பு மற்றும் விண்வெளி பற்றிய சிரேஷ்ட நிறைவேற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (2 earth summit) |
| Ocean Atmosphere Interaction using Geo-Spatial Techniques (CSSTEAP) | 01 | 2025.07.14-2025.07.25 | - | வெளிநாடு | வரைபடம் மற்றும் கண்காணிப்புக்கான தொலையுணர்வு மற்றும் தரவு பகுப்பாய்வு ஆகியவற்றில் தொழில்நுட்ப திறன்களைப் பெறுதல். |
| ACRS 2026 | 03 | 2025.10.27 - 2025.10.31 | LKS 809,500.00 (விமான டிக்கட்டுக் களுக்கு) | வெளிநாடு | Remote Sensing 2025 (ACRS 2025) குறித்த 46 வது ஆசிய மாநாட்டில் நில அளவைத் திணைக்களம் சார்பாக பங்கேற்றல். |
| Geo Computation & Data Science CSSTEAP | 02 | 2025.11.17-2025.11.28 | - | வெளிநாடு | புவிசார் மற்றும் தரவு அறிவியல் குறித்த குறுகிய பாடநெறி |
| Short Course on Environmental Pollution Monitoring Through Satellite Observations and Advanced Modeling | 01 | 2025.11.17-2025.11.28 | - | வெளிநாடு | To perform duties as an Assistant Lecturer by engaging in teaching, curriculum development, and specialized research at the Institute o surveying and Mapping. |
| Satellite Remote Sensing Data Acquisition & Processing (CSSTEAP) | 04 | 2025.11.10 – 2025.12.05 | - | வெளிநாடு | புவிசார் மற்றும் தரவு அறிவியல் குறித்த குறுகிய பாடநெறி |

## 7.0 **இணக்கப்பாட்டு அறிக்கை**

| **இல.** | **உரியதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடுகள்** | **இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கம் அற்றது.)** | **இணக்கமற்றதாயின் அதற்கான சிறு விளக்கம்** | **இணக்கப்பாடின்மையை எதிர்காலத்தில் தடுப்பதற்காக பிரேரணை முன்வைக்கப்படுகின்றதுல்லியமான தீர்மான செயல்முறைகள்** |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/ கணக்குகள் என்பன உரிய திகதிகளில் மு+ன்வைக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | இணக்கமானது. | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | இணக்கமானது. | | |
| 1.3 | வியாபார மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வர்த்தக | பொருத்தமற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | பொருத்தமற்றது | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | இணக்கமானது. | | |
| 1.6 | பிற | பொருத்தமற்றது | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பேணுதல்** (நி.பி. 445) | | | |
| 2.1 | அரச நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இற்கு அமைய நிலையான சொத்துக்கள் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 2.2 | பிரத்தியேக வேதனாதிகள் ஆவணம்/ பிரத்தியேக வேதனாதிகள் அட்டைகளை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 2.3 | கணக்காய்வு விசாரணை ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்குகளினதும் சாராம்சங்களைத் தயாரித்து உரிய திகதியில் பொதுத் திறைசேரிக்கு முன்வைத்தல். | இணக்கமானது. | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.7 | பொருள் விபரப் பட்டியல் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 2.8 | இருப்பு ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 2.9 | நட்ட இழப்பு ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 2.10 | பொறுப்புக்கள் ஆவணத்தை இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 2.11 | அடியிதழ்சேர் புத்தகங்கள் ஆவணத்தை (GA-N 20) இற்றைப்படுத்திப் பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 3 | **நிதிசார் நிர்வாகத்திற்காக பணிகளைக் கையளித்தல்** (நி.பி. 135) | | | |
| 3.1 | நிதிசார் அதிகார நிறுவனத்தினுள் அதிகாரங்களை ஒப்படைக்கப்பட்டு உள்ளமை | இணக்கமானது. | | |
| 3.2 | நிதிசார் அதிகாரங்களை ஒப்படைப்பது தொடர்பாக நிறுவனத்தினுள் விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளமை. | இணக்கமானது. | | |
| 3.3 | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் உத்தியோகத்தர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்களின் ஊடாக அங்கீகரிக்கப்படும் விதமாக அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டு உள்ளமை | இணக்கமானது. | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரசாங்கத்தின் சம்பளப் பத்திர மென்பொருள் பொதியைப் பயன்படுத்தும் போது கணக்காளர்களின் நிர்வாகத்தின் கீழ் செயற்படுதல் | இணக்கமானது. | | |
| 4 | **வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தைத் தயாரித்தல். | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டத்தைத் தயாரித்தல். | இணக்கமானது. | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல். | இணக்கமானது. | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது. | | |
| 4.5 | வருடாந்த நிதிப் பாய்ச்சல் கூற்றை உரிய திகதியில் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது. | | |
| 5 | **கணக்காய்வு விசாரணைகள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில்கள் முன்வைத்துள்ளமை. | இணக்கமானது. | | |
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நிதிப் பிரமாணம் 134(2) இற்கு அமைய வருட தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய பின்னர், உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல். | இணக்கமானது. | | |
| 6.2 | சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் gjpy;fs; முன்வைத்துள்ளமை. | இணக்கமானது. | | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவிற்கு அமைய சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.4 | நிதிப் பிரமாணம் 134(3) இற்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இற்கு அமைய, குறைந்த பட்சம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நான்கேனும் (04) உரிய ஆண்டினுள் நடாத்தப்பட்டு இருத்தல். | இணக்கமானது. | | |
| 8 | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் கையுதிர்த்தல் தொடர்பான தகவல்கள் கணக்குத் தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 8.2 | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, அச்சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதற்காக ஒருங்கிணைப்பதற்குப் பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவ் உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் கணக்குத் தணிக்கையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இற்கு அமைய, பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கையானது குறிப்பிட்ட திகதிக்கு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.4 | வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் பிற பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் முன்னெடுத்தல். | இணக்கமானது. | | |
| 8.5 | பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருட்களை நி.பி. 772 இற்கு அமைய முன்னெடுத்தல். | இணக்கமானது. | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | கையிறுப்பிலுள்ள வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 9.2 | வாகனங்கள் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்டு 06 மாதங்களுக்கும் குறைந்த காலப் பகுதியில் ஒதுக்கப்பட்டு உள்ளமை. | இணக்கம் அற்றது | பல கட்டங்களின் கீழ் செயற்படும் போது (கணிப்பீட்டுக் குழு/ விலை மதிப்பீட்டுக் குழு நியமித்தல், அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல், வாகனங்களின் பதிலை இரத்துச் செய்தல், விலை மனு கோரல் போன்ற விடயங்கள்) அந்நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக செல்லும் போது உரிய குழுவின் தீர்மானத்தைப் பெற்றுக் கொள்ள காலம் செல்கின்றமை. | குழுக்களின் தீர்மானங்களை அவசரமாக வழங்குவதற்கு ஆலோசனை வழங்குவதன் மூலம் |
| 9.3 | வாகன பதிகைப் புத்தகங்களைப் பேணி அவற்றை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல். | இணக்கமானது. | | |
| 9.4 | சகல வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் நி.பி. 103, 104 மற்றும் 109 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுதல். | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.5 | 2016.12.29 திகதி 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் தகனத்தை மீள் | இணக்கமானது. | | |
| 9.6 | குத்தகைக் கால எல்லையின் பின்னர், குத்தகை வாகனங்களின் பதிகைப் புத்தகங்களின் முழுமையான உரிமையை கையகப்படுத்தி உள்ளமை. | இணக்கமானது. | | |
| 10 | **வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 10.2 | மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்னோக்கிக் கொண்டு வரப்பட்ட தொழிற்படா வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 10.3 | வங்கி இணக்கக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிகட்டப்பட வேண்டி இருந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொண்டு அம்மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 11 | **மானியங்களின் பயன்பாடுகள்**. | | | |
| 11.1 | கருத்திற் கொள்ளப்பட்டிருந்த மானியங்களானது அவற்றின் வரையறையை மீறாத வகையில் செலவுகளை ஏற்றல். | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 11.2 | நி.பி. 94(1) இற்கு அமைய, வழங்கப்பட்ட மானியத்திலிருந்து பயன்படுத்திய பின்னர் ஆண்டு இறுதியில் எஞ்சிய மானியங்களானது வரையறையை மீறாத வகையில் பொறுப்புக்களுக்கு எட்டுதல். | இணக்கமானது. | | |
| 12 | **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு இணங்குதல். | இணக்கமானது. | | |
| 12.2 | நிலுவையாக காணப்பட்ட கடன் மீதிகள் தொடர்பாக காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் அதிகமான காலத்தில் இருந்து நிலவி வருகின்ற கடன் மீதிகள் தீர்க்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான நிர்வாகக் கணக்கை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணக்கமானது. | | |
| 14 | **பணிமுற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டு முடிவில் நிதிப் புத்தகத்தின் மீதியை திறைசேறி தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு பணம் அனுப்பப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 14.2 | நி.பி. 371 இற்கு அமைய வெளியிடப்பட்ட தேவை நிமித்த உப பணிமுற்பணமாது, அச்செயற்பாடு முடிவடைந்து ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 14.3 | நி.பி. 371 இற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மீறாத வகையில் தேவை நிமித்த உப பணிமுற்பணம் வெளியிடப்பட்டு இருந்தமை. | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 14.4 | பணிமுற்பணக் கணக்கு மீதியை, திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்பு நோக்குதல். | இணக்கமானது. | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | உரிய பிரமாணங்களுக்கு இணங்கியதாக, சேகரிக்கப்பட்ட வருமானத்தில் இருந்து மீளச் செலுத்துகைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 15.2 | சேகரிக்கப்பட்டு இருந்த வருமானங்கள், வைப்புக் கணக்கிற்கு வரவில் இடாமல் நேரடியாக வருமானத்திற்கு வரவில் இடப்பட்டு இருந்தமை. | இணக்கமானது. | | |
| 15.3 | நி.பி. 176 இற்கு அமைய நிலுவை வருமான அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை நடாத்திச் | இணக்கமானது. | | |
| 16.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்களை எழுத்து மூலம் வழங்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 16.3 | 20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கு அமைய சகல அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 17 | **பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**. | | | |
| 17.1 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்களை அதன் வலைத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டு உள்ளதுடன், வலைத்தளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் தொடர்பான பொது மக்களின் பாராட்டுக்கள் / குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 08 ஆவது மற்றும் 10 ஆவது பிரிவுகளுக்கு அமைய ஆண்டிற்கு இரு தடவைகள் அல்லது ஆண்டிற்கு ஒரு முறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 18 | **பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்துதல்**. | | | |
| 18.1 | 05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2018(1) ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரஜைகள்/ சேவைப்பயனர் பட்டயம் ஒன்று உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 18.2 | அச் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம், பிரஜைகள்/ சேவைப்பயனர் பட்டயம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல் மற்றும் மதிப்பீடுகளுக்காக நிறுவனத்தின் மூலம் செயன்முறை ஒன்றை தயாரிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 19 | **மனித வள திட்டத்தை உருவாக்குதல்**. | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 பின்னிணைப்பு 02 மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மனித வள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்காகவும் ஆண்டு ஒன்றிற்கு குறைந்த பட்சம் 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வாய்ப்பு ஒன்றை மேற்குறிப்பிட்ட மனித வள திட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தி உள்ளமை. | இணக்கமானது. | | |
| 19.3 | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 19.4 | மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளுக்கு பதில் வழங்குதல்** | | | |
| 20.1 | கடந்த ஆண்டிற்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டு உள்ளமை. | இணக்கமானது. | | |

## 8.0 முடிவுரை

மீளாய்வு ஆண்டிற்காக திட்டமிடப்பட்டவாறு இலக்காகக் கொள்ளப்பட்ட விடயங்களை அடைவதற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்திட்டங்களைப் போலவே சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்கு தேவைப்படுகின்ற அவசர அளவீடுகள் மற்றும் வரைபட தேவைப்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு திணைக்களத்திற்கு முடியுமானதாக இருந்ததுடன், நில அளவீட்டு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை 122.51% வரை எட்டுவதற்கு முடியுமானதாக இருந்தது. இதில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் செயல்பட்டு திணைக்களத்தின் வினைத்திறனை சிறப்பாக பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய திணைக்களத்தின் சகல சேவைகளுக்கும் உரிய மற்றும் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த பதவியணி அங்கத்தவர்களின் சேவையை விசேடமாக பாராட்டிக் கொள்கின்றேன். அவ்வாறே, பணிகளை நிறைவேற்றுவதில் சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சின் உத்தியோகத்தர்கள் உட்பட தொழிற்சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்களையும் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

பீ. கே. எல். எஸ். படுவாவல

நில அளவையாளர் நாயகம்

தயாரிப்பு – பிரதான தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் உட்பட பதவியணி,

முன்னேற்றப் பிரிவு, நில அளவையாளர் நாயக அலுவலகம், கொழும்பு.

## நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

### 01 மனித வளம் மற்றும் நிர்வாகப் பிரிவு

**வகிபாகங்கள்**

திணைக்களத்தின் செயற்பாடுகளை சீரிய முறையில் நடாத்திச் செல்லுதற்குத் தேவையான ஊழியர்களை நியமித்தல், திணைக்கள ஊழியர்களின் தனிப்பட்ட கோப்புகளைப் பேணல், முதலிய மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய திணைக்களத்தின் மற்றும் நிருவாகச் செயற்பாடுகளை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுதல் இப் பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது. ஒருங்கிணைந்த சேவைகள், ஓய்வூதியம், போக்குவரத்து, நில அளவைச் சேவைகள், திணைக்களச் சேவைகள், நில அளவைக் கள உதவியாளர்கள் மற்றும் ஒழுக்காற்றுப் பிரிவு என 07 பிரிவுகளின் கீழ் செயற்படுகின்றது.

2025 ஆம் ஆண்டிற்குரியதாக பிரதானமாக பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

*01.* ஆவணப் காப்பகப் பாதுகாப்பாளர் பதவிகள் 06 இற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

*02.* வெற்றிடமாகக் காணப்படுகின்ற 45 வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பதவிகள், 01 சட்ட உத்தியோகத்தருக்கான வெற்றிடம் காணப்படுவதால் அதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

*03.* வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான செயல்முறையை திருத்தம் செய்து தயாரித்தல்.

*04.* பயிலுநர் நில அளவையாளர்கள் 92 பேரை ஆட்சேர்ப்பு செய்தல்.

*05.* நில அளவீட்டுக் கள உதவியாளர்கள் 75 பேரை திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**செயலாற்றுகை**

மனித வள முகாமைத்துவத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்காக நிர்வாகப் பிரிவின் சகல பிரிவுகள் மூலம் பின்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

| | விபரம் | செயல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் | 142 |
| 2 | பரீட்சைகளை நடாத்துதல் | 20 |
| 3 | நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் | 12 |
| 4 | சேவையில் நிரந்தரமாக்குதல் | 186 |
| 5 | பதவி உயர்வுகள் | 368 |
| 6 | சம்பள ஏற்றங்களை செலுத்துதல் | 1432 |
| 7 | ஆட்சேர்ப்பு செயன்முறையைத் தயாரித்தல் | 01 |
| 8 | சேவையை விட்டுச் செல்லல் | 53 |
| 9 | பணி ஓய்வு | 194 |

| | | |
|---|---|---|
| 10 | இராஜினாமாக்கள் | 23 |
| 11 | பணி இடை நீக்கம் | - |
| 12 | மீண்டும் சேவையில் அமர்த்துதல் | 07 |
| 13 | ஒழுக்காற்று நடவடிக்கைகள் | - |
| 14 | வெளிநாட்டு விடுப்பு ஒப்புதல்கள் | 60 |
| 15 | பிணைகளை ஆரம்பித்தல் | - |
| 16 | பிணைகளை விடுவித்தல் | - |
| 17 | கடன்களை அங்கீகரித்தல் (சொத்து) | - |
| 18 | புதிய உத்தியோகத்தர்களின் வருகை (ஒருங்கிணைந்த சேவை) | 30 |
| 19 | சேவையில் இருந்து நீக்குதல் | 01 |

## 1.1 **ஒழுக்காற்றுப் பிரிவு**

**வகிபாகங்கள்**

திணைக்களத்தில் பணியாற்றுகின்ற நில அளவைச் சேவையின் உத்தியோகத்தர்களின், ஒருங்கிணைந்த சேவையின் உத்தியோகத்தர்களின் மற்றும் திணைக்களப் பதவிகளில் பணியாற்றுகின்ற அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் தாபன விதிக் கோவையின் 02 ஆம் பிரிவிற்கு அமைய ஆரம்ப கட்ட விசாரணையை நடாத்துதல், குற்றப் பத்திரம் தொடுத்தல், எச்சரிக்கை விடுத்தல், முறையான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளுதல், ஒழுக்காற்று கட்டளைகளை வெளியிடுதல் உட்பட ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குள்ள சகல கடமைகளும் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

***செயலாற்றுகை***

| 2025.01.01 **ஆம் திகதிக்கு ஒழுக்காற்றுப் பிரிவில் அமுலில் காணப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025 **ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025 **ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025.12.31 **ஆம் திகதியாகும் போது ஒழுக்காற்றுப் பிரிவில் அமுலில் உள்ள கோப்புக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 44 | 23 | 16 | 51 |

## **1.2 போக்குவரத்துப் பிரிவு**

**வகிபாகங்கள்**

*பிரதான அலுவலகத்தின் போக்குவரத்துத் தேவைகளுக்காக பணியாற்றுதல், வாகன மீள் திருத்தங்கள்/ தாபரிப்பு/ பரிசீலனை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் போலவே வாகன விபத்துக்களுக்குரிய சகல நடவடிக்கைகள் தொடர்பாகவும் செயற்படுதல்.*

செயலாற்றுகை

| | விடயம் | 2024 ஆம் ஆண்டில் எஞ்சிய அளவு | 2025 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் | 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அளவு | 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்ற முடியாமல் போன அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | வருமான உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்ளுதல் | 03 | 255 | 254 | 04 |
| 2 | வாகன விபத்துக்கள் தொடர்பான கடிதங்கள் பெறுகை | - | 293 | 293 | - |
| 3 | நாளாந்த ஓட்டக் குறிப்புகளின் பெறுகை | - | 2605 | 2120 | 485 |
| 4 | வாகனங்களை பழுது பார்த்தல் | - | 70 | 70 | - |
| 5 | வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குதல் | - | 284 | 284 | - |
| 6 | கடமைகளுக்குச் செல்வதற்காக வாகனங்கள் வழங்குதல் | - | 684 | 684 | - |
| 7 | தள வாகனங்களை இணைத்தல் / தனியார் மற்றும் அரச உத்தியோகபூர்வ வாகனங்களை இணைத்தல் | - | 56 | 56 | - |
| 8 | விடுமுறைத் தகவல்களை வழங்குதல் | - | - | - | - |
| 9 | மேலதிக நேர/ போக்குவரத்துச் செலவு உறுதிச் சீட்டுக்களை முன்வைத்தல் | - | 72 | 72 | - |
| 10 | வாகனங்களை காப்புறுதி செய்தல் | - | 309 | 309 | - |
| 11 | கணக்காய்வு உசாவல்கள் | - | 10 | 10 | - |
| 12 | நலன்புரிச் செயற்பாடுகளுக்கு வாகனங்கள் வழங்குதல் | - | 19 | 19 | - |
| 13 | உதவி சாரதிகள் | - | 12 | 12 | - |
| 14 | வாகனங்களை பரிசீலிப்பதற்கான கோரிக்கைகள் | - | - | - | - |
| 15 | சாரதி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | - | 2 | 2 | - |
| | **கூட்டுத் தொகை** | 03 | 4671 | 4185 | 489 |

திணைக்கள வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பில் கீழ்வருமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| 2025 **ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெற்ற விபத்துக் கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025 **ஆம் ஆண்டில் இடம்பெற்ற விபத்துக்களின் எண்ணிக்கை** | 2025 **ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட மொத்த விபத்துக் கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025 **ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட விபத்துக் கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025.12.31 **ஆம் திகதிக்கு அமுலில் உள்ள எஞ்சிய விபத்துக் கோப்புக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 38 | 11 | 49 | 15 | 34 |

திணைக்கள பிரதான அலுவலகத்தில் தற்பொழுது 17 வாகனங்கள் காணப்படுகின்றன.

## 02. சட்டப் பிரிவு

**<u>வகிபாகங்கள்</u>**

திணைக்களம் தொடர்பான சட்ட விவகாரங்களை மேற்கொள்ளுதல், மாவட்ட நீதிமன்றம் / மேல் நீதிமன்றம் / மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றால் திணைக்களத்தினால் வழக்குகள் தாக்கல் செய்யும்போதும் திணைக்களத்திற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும்போதும் சட்டமா அதிபருக்கு உதவுதல் ,திணைக்களத்தின் அதிகாரிகள் பணிகள்புரியும்போது முகங்கொடுக்கின்ற சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் ,திணைக்களத்திற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின்போது நிள அளவையாளர் நாயகம் சார்பாக ஆஜராதல்.

**<u>செயலாற்றுகை</u>**

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பில் பின்வருமாறு பங்காற்றப்பட்டுள்ளது.

| **நீதிமன்றம்** | 2025.01.01 **ஆம் திகதியன்று நிலவும் எண்ணிக்கை** | 2025.12.31 **வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை** | 2025.12.31 **வரையான காலத்தில் முடிக்கப்பட்ட எண்ணிக்கை** | 2025.12.31 **ஆந் திகதியன்று நிலவும் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 38 | 4 | 11 | 31 |
| மேன்முறையீட்டு | 61 | 22 | 8 | 75 |
| மேல் நீதிமன்றம் | 5 | 4 | - | 9 |
| மாவட்ட நீதிமன்றம் | 45 | 4 | 5 | 44 |

**அடிப்படை விடயங்களை மேற்கொள்கின்ற கோப்புகள் தொடர்பில் கீழ்வருமாறு பங்காற்றப்பட்டுள்ளது .**

| 2025.01.01 **ஆம் திகதியன்று நிலவும் எண்ணிக்கை** | 2025.12.31 **வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை** | 2025.12.31 **வரையான காலத்தில் முடிக்கப்பட்ட எண்ணிக்கை** (**பணம் அறவிட்டு அல்லது பதிவழிப்பதற்கு ஆற்றுப்படுத்தி**) | 2025.12.31 **வரையான காலத்தில் சட்டமா அதிபர் அவர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025.12.31 **ஆம் திகதியன்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கோப்புக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 48 | 8 | 3 | - | 53 |

**வழக்குத் தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபருக்கு கோப்புக்களை ஆவணப்படுத்தல் கீழ்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது**

| 2025.01.01 **ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு உள்ள கோப்புக்கள்** | 2025.12.31 **வரையான காலத்தில் ஆற்றுப்படுத்தப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025.12.31 **வரையான காலத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய முடிக்கப்பட்ட அல்லது வழக்குத் தொடுக்கப்பட்ட கோப்புக்களின் எண்ணிக்கை** | 2025.12.31 **ஆந்திகதியன்று வழக்குத் தொடரும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் கோப்புக்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 8 | - | - | 8 |

**மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கோப்புக்களை ஆவணப்படுத்தல் கீழ்வருமாற மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

| 2025.01.01 **ஆந்திகதியன்று நிலவும் எண்ணிக்கை** | 2025.12.31 **வரையான காலத்தில் கிடைக்கப் பெற்ற எண்ணிக்கை** | 2025.12.31 **வரையான காலத்தில் முடிக்கப்பட்ட எண்ணிக்கை** | 2025.12.31 **ஆந்திகதியன்று நிலவும் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 20 | 7 | 5 | 22 |

## 03. **கணக்குப் பிரிவு**

**வகிபாகங்கள்**

35 கட்டண அலுவலகங்களை உள்ளடக்கிய துறைசார் கணக்கு முறையை பராமரித்தல். திணைக்களத்தின் வருடாந்த தொடர்ச்சியான மற்றும் மூலதன செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் அதை அரசாங்க வரவு செலவுத் திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல். அதற்கேற்ப கிடைக்கின்ற ஒதுக்கீட்டிற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலிருந்து தேவையான நிதிகளைப் பெற்றுக்கொண்டு, அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்குதல் மற்றும் நிதிக் கொள்கைகளின்படி அவற்றை திறம்பட பயன்படுத்துதல்.

திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை வரம்புகளுக்குள் நிர்வாகித்தல் மற்றும் பராமரித்தல்.

திணைக்களத்தின் வருமானத்தை தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் மூலம் வசூலிக்க நடவடிக்கை எடுப்பது.

கணக்காய்வு தொடர்பிலான வினாக்களுக்கான பதில்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முறையாக சமர்ப்பித்தல் மற்றும் திணைக்களத்தின் வருடாந்த நிதிநிலை அறிக்கைகளை உரிய திகதியில் தயாரித்தல்.

**செயலாற்றுகை**

தயவுசெய்து, முதன்மை அறிக்கையின் பக்கம் 47- 59 ( ஆண்டின் மொத்த நிதி செயற்றிறன் ), பக்கங்கள் 68 - 77 ( இணக்க அறிக்கை ) ஐயைப் பார்க்கவும்.

## 04. உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் பிரிவு

**வகிபாகங்கள்**

| | |
|---|---|
| 1 | நில அளவையாளர் நாயகம் அலுவலகம் ,மாகாண நில அவையாளர் அலுவலகம் ,மாவட்ட நில அளவையாளர் அலுவலகம் ,திணைக்களத்தின் கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற பிரதேச நில அளவையாளர அலுவலகங்களில் ,மற்றும் திணைக்களத்தின் பங்களாக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல் மற்றும் கட்டுமானம் தொடர்பில் செயற்படுதல். |
| 2 | அளவிடும் கருவிகள் மற்றும் ஆபரணங்களை சரிசெய்தல் மற்றும் சேவை செய்தல் |
| 3 | அளவிடும் நிருவாக குறியீடுகளை அளவிடுவதற்கான போல்ட் உற்பத்தி |
| 4 | திணைக்களத்தின் முகாம் பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்தல், முந்தைய முகாம்களை கழற்றுதலும் நிறுவுதலும் |
| 5 | நில அளவையாளர் நாயகஅலுவலகத்தின் பாதுகாப்பு மற்றும் தூய்மை தொடர்பில் வெளி நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல். |
| 6 | பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களை வாடகைக்கு எடுப்பதற்கான பொருத்தமான வர்த்தமானி அறிவிப்புகளைத் தயாரித்தல் |
| 7 | திணைக்கள அடையாள அட்டைகளை திணைக்கள ஊழியர்களுக்கு வழங்குதல் மற்றும் மீள ஒப்படைக்குக்கும் போது தீர்வை வழங்குதல். |
| 8 | உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்கியமைக்காக கட்டணப் பட்டியல்களை நிர்ணயித்தல். |

**செயலாற்றுகை**

ரூபா 50,000.00 மேற்பட்ட புதிய கட்டுமானங்கள் மற்றும் பழுது பார்த்தல்கள்.

| தொ. இல. | திட்டப்பணி | செலவினம் (ரூ.) |
|---|---|---|
| 01 | 8 கழிப்பறை அலகுகளில் நீர் தேங்குதல் மற்றும் விரிசல்களை சரிசெய்ய பீனிக்ஸ் நிறுவனத்திற்கு பணம் செலுத்துதல் (டிசம்பர் 2024 முதல்) | 3,859,113.15 |
| 02 | 2 அலகு கூரை அடுக்கு கழிப்பறைகளை நீர் புகாமல் அமைப்பதற்காக பீனிக்ஸ் நிறுவனத்திற்கு பணம் வழங்குதல் | 840,871.51 |
| 03 | அழுத்த சோதனை மற்றும் நீர் நெடுவரிசை ஆய்வு (மொத்தம் 16 சோதனைகள்) | 350,000.00 |
| 04 | இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடிகளுக்கு பொருட்களைத் தூக்குதல் | 249,030.00 |
| 05 | 50 கதவு மூடல்கள் (Door Closers) கொள்வனவு செய்தல் | 203,389.76 |
| 06 | SGO யன்னல்களை பழுதுபார்த்தல் (கண்ணாடி கொள்வனவு செய்தல் ) | 50,000.00 |
| 07 | 8 கழிப்பறை அலகுகளில் நீர் தேங்குவதற்கும் விரிசல்களை சரிசெய்வதற்குமான தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்புக்கான கொடுப்பனவு | 700,843.75 |
| 08 | கழிப்பறை பொருட்களை கொள்வனவு செய்தல் (ரோசெல் இருந்து) | 453,133.18 |

| | | |
|---|---|---|
| 09 | கழிப்பறை புதுப்பித்தலுக்காக சீமெந்து கொள்வனவு செய்தல் (டோக்கியோ சீமெந்து நிறுவனத்திடமிருந்து) | 352,754.27 |
| 10 | கழிப்பறை புதுப்பித்தலுக்காக 60 Putty பைகள் கொள்வனவு செய்தல் | 50,000.00 |
| 11 | கழிப்பறை புனரமைப்பில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு புத்துணர்ச்சியூட்டும் உணவு மற்றும் பானங்கள் வழங்குதல் | 116,000.00 |
| 12 | 13 கழிப்பறை காகித தாங்கிகள் (Toilet paper holders) கொள்வனவு செய்தல் | 75,296.39 |
| 13 | கழிப்பறைகளைப் பிரிப்பதற்கான (Partition) பொருட்கள் கொள்வனவு செய்தல் | 2,771,705.38 |
| 14 | மேலதிக நில அளவையாளர் நாயக அலுவலகத்திற்கு (களம்) நிறப்பூச்சுப் பூசுதல். | 136,570.00 |
| 15 | சட்ட அதிகாரியின் அறையைப் பிரித்தல் (Partition) | 739,606.80 |
| 16 | கட்டிடப் பிரிவினால் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் தச்சு வேலைகள் மற்றும் ஏனைய குழாய்/மின்சார பழுதுபார்ப்புகளுக்கான கட்டிடப் பொருட்களை கொள்வனவு செய்தல். | 1,060,446.00 |
| 17 | ஆவண முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் நியமங்கள் பிரிவின் வளி சீராக்கியிற்கு மின்சார முறைமையை தயாரித்தல். | 50,000.00 |
| 18 | பிரம்பு நாற்காலிகள் நெய்தல் | 58,200.00 |
| 19 | Trimble உபகரணங்களை பழுதுபார்த்தல் | 875,000.00 |
| 20 | நில அளவையாளர் நாயக அலுவலகத்தில் வளி சீராக்கியைப் பழுதுபார்த்தல் (கட்டம் 1, 2 மற்றும் 3) | 347,694.00 |

- 2025 **இல் முன்னெடுக்கப்பட்ட பணிகள்**

| | |
|---|---|
| I. | கம்பஹா மாவட்ட நில அளவை அலுவலகத்தின் இராக்கைகளைத் தயாரிப்பதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் தச்சுத் தொழிலுக்கு தொழிலாளர் பங்களிப்பை வழங்குதல். |
| II | மேல் மாகாண அலுவலகத்தின் பழுதுபார்ப்புகளுக்கான (நிறப்பூச்சுப் பூசுதல்/ வளி சீராக்கி) மதிப்பீடுகளையும் விபரக்குறிப்புகளையும் தயாரித்தல். |
| III | தியத்தலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள், பரிசோதனைகள் மற்றும் வைப்புக் கட்டணங்கள் என்பவற்றுக்கான பரிந்துரைகளை வழங்குதல். |
| IV | நீர் பிரிவின் மூலம் கட்டிடத்தின் தினசரி பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| V | மின் பிரிவின் மூலம் கட்டிடத்தின் தினசரி பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| VI | கண்ணாடி (30) மற்றும் door closer (20) நிறுவலுக்கு மேலதிகமாக சுமார் 73 தினசரி பழுதுபார்ப்புகள் தச்சுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டன . |
| VII | வருடாந்திர பூரணமானி சேவை ஆவணத்தின் படி, பூரணமானி உபகரண தொழில்நுட்ப வல்லுநர்களால் சேவை / பழுதுபார்க்கப்பட்டு களத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளன. (ஒரு நாள் சேவை உட்பட) |

| | |
|---|---|
| VIII | சேவை பழுதுபார்ப்பின் விளைவாக வழங்கப்பட்ட பூரணமானி துணைக்கருவிகள் சேவை / பழுதுபார்ப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டு உள்ளன. |
| IX | பன்முகப்படுத்தப்பட்ட சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. |
| X | அளவீட்டு கட்டுப்பாட்டு புள்ளிகளுக்கு சி வகை திருகுகள் மற்றும் ஏ வகை திருகுகள் தயாரிக்கப்பட்டன. |
| XI | ஏனைய நிறுவனங்களுக்கு சேவை செய்தலை முறைப்படுத்துதல் மற்றும் வெளியிடுதல். |
| XII | வெளி நிறுவனங்களுக்கு அளவீட்டுக் கருவிகள் வழங்குவதன் கீழ் அரச பாடசாலைகளுக்கு அளவீட்டு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. |
| XIII | அலுவலக அடையாள அட்டைக்கு 192 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 192 அலுவலக அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. |

- **பாதுகாப்பு மற்றும் துப்புரவு நடவடிக்கைகள்**

மீளாய்விற்கு உட்பட்ட 2025 ஆம் ஆண்டு பூராகவும் இச்சேவையானது திணைக்களத்தின் உபகரணங்கள் மற்றும் கட்டிடப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் நிறைவேற்றப்பட்டு உள்ளது. Brave Guard security and investigations services (pvt) ltd பாதுகாப்பு நிறுவனத்தால் பாதுகாப்புச் சேவை வழங்கப்பட்டதுடன், Resource Environmental & Management Service (pvt) ltd நிறுவனம் மற்றும் 2025.12.01 Building Maintenance & Environment Services (pvt) ltd தனியார் துப்புறவாக்கல் நிறுவனம் ஆகியவற்றால் திணைக்களமானது சுத்தமாகவும், துப்புறவாகவும், கண்கவர் வகையிலும் பராமரிக்கப்பட்டது.

## 05. **கொள்முதல் மற்றும் வழங்கல் பிரிவு செயலாற்றுகை**

01. 2025 ஆம் ஆண்டில் 53 மில்லியன் ரூபாயிற்கும் அதிகமான மூலதனக் கொள்வனவுகளும், 24 மில்லியன் ரூபாயிற்கு அதிகமான மீண்டுவரும் கொள்வனவுகளும், பிம்சவிய செயற்திட்டத்திற்காக 06 மில்லியன் ரூபாயை அண்மித்த மீண்டுவரும் கொள்வனவுகளும் மேற்கொளப்பட்டு உள்ளன.

02. நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகள்,மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகங்கள், மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் பிரதேச நில அளவை அலுவலகங்கள் மற்றும் நாடு பூராகவும் பரவிக் காணப்படும் நில அளவை உத்தியோகத்தர்களினால் பராமரிக்கப்பட்டு வரும் 757 களஞ்சியசாலைப் பேரேடுகளுக்குரிய களஞ்சியக் கணிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.

03. அவற்றிலிருந்து அரச நில அளவையாளர் 554 பேருக்கும் ,சகல மாகாண நில அளவையாளர்கள் அலுவலகங்களுக்கும் ,சகல மாவட்ட நில அளவையாளர் அலுவலகங்களுக்கும் , சகல பிரதேச நில அளவையாளர் அலுவலகங்களுக்கும் மேலும் தியத்தலாவ அளவீடு மற்றும் படவரைபு நிறுவனத்தில் உள்ள களஞ்சிய அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ,சுற்றுலா பங்களா மற்றும் விடுமுறைக் களிப்பிடம் அனைத்திற்கும் ,நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளுக்கும் 2025.12.31 திகதிக்கு தீர்வைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கோப்புகள் தீர்க்கப்பட்டன.

04. ஓய்வு பெற்ற மற்றும் பதவி விலகிய உத்தியோகத்தர்கள் 62 பேரிற்காக நிரந்தர தீர்வைகள் வழங்கப்பட்டு உள்ளன.

## 06. **தகவல் தொழில்நுட்பப் பிரிவு**

**வகிபாகங்கள்**

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது திணைக்களத்தின் தொழில்நுட்ப செயற்பாட்டு நிலையமாக தொழிற்படுகின்றதுடன், அதன் முதன்மையான கடமை:

- **திணைக்கள வலைத்தளம்**: திணைக்கள வலைதளத்தை இற்றைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- **இணைய சேவைகள் மற்றும் மென்பொருளை உருவாக்குதல்**: திணைக்களத்தின் தேவைக்கேற்ப இணைய சேவைகள் மற்றும் மென்பொருளை உருவாக்குதல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.
- **முறைமைப் பாதுகாப்பு**: திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து முறைமைகள் மற்றும் தரவுகளின் பாதுகாப்பை மையப்படுத்தி கட்டுப்படுத்துதல்.
- **உட்கட்டமைப்பு வசதிகள்**: தலைமை அலுவலகத்தில் கணினி வலையமைப்பு, தரவு மையம் மற்றும் இணைய வசதிகளை முகாமைத்துவம் செய்தல்.
- **துணைச் சேவைகள்**: திணைக்களத்தின் கணினி உபகரணங்களின் பழுதுபார்ப்பு மற்றும் தொழில்நுட்ப உதவி மற்றும் துணை மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

**செயலாற்றுகை**

I. **திணைக்கள வலைத்தளம்**:

திணைக்களத்தின் வலைத்தளத்தை இற்றைப்படுத்திப் பராமரிப்பதன் மூலம் திணைக்களப் பதவியணி மற்றும் பொதுமக்களுக்கு தேவையான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

II. **வலை சேவைகள் மற்றும் மென்பொருள் மேம்பாடு**:

2025 ஆம் ஆண்டளவில் பின்வரும் வலைச் சேவைகள் மற்றும் மென்பொருள்கள் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

1. Online Map Store

இந்த இணையவழி அம்ச மென்பொருளானது பொதுமக்கள் திணைக்களத்தின் அச்சிடப்பட்ட அனைத்து வரைபடங்களையும் இணையத்தளத்தின் ஊடாக கொள்வனவு செய்து 3 நாட்களுக்குள் தமக்கு விருப்பமான எந்தவொரு பிரதேசத்திற்கும்/வீட்டிற்கும் கொண்டு வர முடியும். அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கைக்கு அமைவாக வரைபடங்களை விற்பனை செய்வதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் இந்த இணையச் சேவை அபிவிருத்தி செய்யப்பட்டு நில அளவைத் திணைக்களத்தின் 225 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. தற்போது திணைக்களத்தின் அச்சிடப்பட்ட வரைபடங்கள் மாத்திரம் இச்சேவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் பொதுமக்கள் அதை கொள்வனவு செய்வதற்கு ஏதுவாக எண்மத் தரவுகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. DS க்கான SRIMS

இச்சேவையானது பிரதேச செயலகங்களுக்கு இணையதளம் மூலம் மாவட்ட நில அளவை அலுவலகங்களுக்கு நில அளவை கோரிக்கைகளை அச்சு நகல் வடிவில் சமர்ப்பிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு இணைய சேவையாகும்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தமது கோரிக்கைகளின் நிலைமையை சரிபார்க்கவும், மீளாய்வுகளுக்காக திருப்பி அனுப்பப்பட்ட நில அளவீட்டுக் கோரிக்கைகளை சரிசெய்யவும், நில அளவீட்டுக் கோரிக்கைகள் மீதான அனைத்து அறிக்கைகளையும் பெற்றுக்கொள்ளவும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு SRIMS அனுமதியளிக்கிறது. மேலும், உத்தியோகத்தர்கள் தமது வேலையை மிகவும் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்யவும், பிழைகளைக் குறைத்தல், அலுவலகங்களுக்கிடையேயான தொடர்பாடலை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கவும் இது உதவுகிறது.




## 3. மாதாந்த களம்/வாகன நிகழ்ச்சித்திட்டம்

பிரதேச நில அளவை அலுவலகங்களின் வசதிக்காக இந்த இணையத்தள செயலி தயாரிக்கப்பட்டு SRIMS தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. களப்பணிக்கு ஒரு மாதத்திற்கு தேவையான நில அளவை உபகரணங்கள் மற்றும் வாகனங்களை தனித்தனியாக பிரித்தெடுத்து களப்பணிகளை கண்காணிக்க அலுவலகத்தில் உள்ள அரச நில அளவையாளர்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேலைத்திட்டத்திற்கேற்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன எனவும், மற்றும் அவ்வாறி முடியவில்லையெனில், அதற்கான காரணங்களைப் பதிவு செய்வதற்கும் நில அளவை அத்தியட்சகருக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாதாந்திர அறிக்கையை Dashboard மூலம் உயர்மட்ட நிர்வாகம் கண்காணிக்க முடியும்.

## 4. Inspection Instructions SS/ SnrSS/ PSG

பிரதேச நில அளவை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசாங்க நில அளவையாளரின் அலுவலகத்தில் அல்லது களப் பரிசோதனை செய்வதற்கு நில அளவை அத்தியட்சகர், சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் மற்றும் மாகாண நில அளவையாளர் நாயகம் ஆகியோரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை உள்ளடக்கும் பொருட்டு இந்த இணையப் பயன்பாடு தயாரிக்கப்பட்டு SRIMS தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு நில அளவையாளரும் அடைந்த முன்னேற்றத்திற்கு அமைவாக ஆண்டின் இலக்கு முன்னேற்றத்தை அடைவதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய நில அளவீட்டுக் கோரிக்கைகளின் பெயர்களை குறிப்பிடுவதற்கும் மேற்பார்வை உத்தியோகத்தருக்கு இதன் மூலம் முடியும். ஒவ்வொரு நில அளவையாளருக்கும் உரிய தகவல்களை பரிசீலிக்க Dashboard மூலம் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

## 5. Info DM **மேம்பாடு**

தரவுத்தளத்தில் பெறப்பட்ட நிலப்படப் பிரதிகளுக்குரியதாக கிடைக்கப் பெறுகின்ற விலக்குகள் மற்றும் திருத்த வரிப்பட எண்ணிக்கையை உள்ளடக்குவதற்கு வசதியளிப்பதன் மூலம் ஆவண முகாமைத்துவப் பிரிவின் உத்தியோகத்தர்களின் இலக்கு வேலை அளவை திட்டமிடுவதற்கு தலைமை அலுவலகத்தின் ஆவண முகாமைத்துவப் பிரிவுக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை திருத்தங்களை களத்திற்கு அனுப்பப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட முறைமைக்குப் பதிலாக Reject Plans By DM & PS ஊடாக மாவட்ட அலுவலகங்களுக்கு SRIMS முறைமையில் தகவல்களைப் பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 6. Dashboard

திணைக்களத்தின் கள நடவடிக்கைகள், காணி விவரத் தரவுத்தளம் மற்றும் ஆவண முகாமைத்துவப் பிரிவு ஆகியவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஒரு " Dashboard " தயாரிக்கப்பட்டது. அதற்காக SRIMS, eDOCs, HuRIMS மற்றும் ProMS தரவுத் தளங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

✓ **பின்வரும் அறிக்கைகளை** SRIMS **முறைமையின் அடிப்படையில்** Dashboard **மூலம் பெற்றுக் கொள்ள முடியும்**.




- **மாவட்ட வாரியான கோரிக்கைச் சுருக்கம்**

மாவட்ட அலுவலகத்தில் காணப்படுகின்ற நில அளவீட்டுக் கோரிக்கைகள், களத்திற்கு வழங்கப்பட்ட நில அளவைக் கோரிக்கைகள், நில அளவை அத்தியட்சகரினால் பரிசோதிக்கப்பட்டுள்ள திருத்தங்களுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள ஆண்டில் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட நில அளவைக் கோரிக்கைகள் மற்றும் பிரதிகளை வழங்குவதற்கான நில அளவைக் கோரிக்கைகள் என்பவற்றின் சுருக்கத்தை மாவட்ட மட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.



- Process Data /Clean Data Status Summary

2024 ஆம் ஆண்டு முதல் களத்தில் செயலாக்கப்பட வேண்டிய மொத்த டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தரவுகள், செயலாக்கப்பட்டு காணி தகவல் முறைமைக்கு அனுப்பப்பட்ட தரவுகள், காணி தகவல் முறைமையில் உள்ளிடப்பட்ட எண்மத் தரவுகள் மற்றும் காணி தகவல் முறைமையில் உள்ளிடப்பட்ட டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தரவுகளின் எண்ணிக்கை மற்றும் EIS இல் சரிபார்க்கப்பட வேண்டிய டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தரவுகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் சுருக்கத்தை மாவட்ட மட்டத்தில் பெற முடியும்.

- Achieved Progress Against Action Plan

ஒவ்வொரு மாவட்டத்தினதும் வருடாந்த இலக்குகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வரைபடங்கள் மற்றும் அட்டவணைகள் வடிவில் திணைக்களத்தின் செயல் திட்டம் தொடர்பில் கண்காணிக்க இது வசதி செய்கிறது.

- DMPS Status Summary

2020 ஆம் ஆண்டு முதல் தலைமை அலுவலகத்தின் ஆவண முகாமைத்துவப் பிரிவினால் பெறப்பட வேண்டிய வரைபடங்கள் மற்றும் காணி விபரப் பட்டியலின் பிரதிகளின் எண்ணிக்கை, மாவட்ட அலுவலகங்களினால் நிலப்படங்கள் வழங்கப்பட்ட மற்றும் வழங்கப்படவுள்ள, ஆவண முகாமைத்துவப் பிரிவுக்கு பெறப்பட்ட தொகை மற்றும் பெறப்பட வேண்டிய தொகை, ஆவண முகாமைத்துவப் பிரிவால் பணிகள் நிறைவசெய்யப்பட்ட, திருத்தங்களுக்காக களத்திற்கு திருப்பி அனுப்பப்பட்ட மற்றும் திருத்தங்கள் முடிக்கப்பட்டு அனுப்பப்பட்ட அளவுகள் மற்றும் ஆவண முகாமைத்துவப் பிரிவினால் சரிபார்க்கப்பட வேண்டிய நிலப்படங்களின் பட்டியல் மற்றும் காணி விபரப் பட்டியல் பிரதிகளின் எண்ணிக்கை என்பவற்றின் சுருக்கத்தை மாவட்ட மட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

- Outstanding Requisition Report – Up to date

நில அளவைக் கோரிக்கைகள் வழங்கப்பட்ட வருடத்திற்கேற்ப இதுவரையில் பூர்த்தி செய்யப்படாத நில அளவீட்டுக் கோரிக்கைகளின் எண்ணிக்கையின் சுருக்கத்தை மாவட்ட மட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

- இதற்கு மேலதிகமாக, Surveyor Cumulative Progress (All Island), PC Surveyor Cumulative Progress (All Island), Outstanding Requisition Report (category wise), Surveyor Cumulative Progress (Based on Surveyor Target) போன்ற SRIMS முறைமையில் உள்ள அறிக்கைகளும் நிர்வாகத்தை இலகுவாக கண்காணிக்கும் பொருட்டு SRIMS முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

✓ eDOC **முறைமையிலிருந்து பின்வரும் அறிக்கைகளை** Dashboard **மூலம் பெற்றுக்கொள்ள முடியும்**.

eDOCs முறைமையின் ஊடாக மாவட்ட அலுவலக ஆவணக்காப்பகத்தால் ஒவ்வொரு அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பான (Surveyor’s Chargeable Documents Summary) சுருக்கத் தகவல்களை சரிபார்க்க இந்த Dashboard உதவுகிறது. 30 க்கும் மேற்பட்ட ஆவணங்களைப் பெற்ற அதிகாரிகளை அடையாளம் காண வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

✓ HuRIMS **முறைமையிலிருந்து பின்வரும் அறிக்கைகளை** Dashboard **மூலம் பெற்றுக்கொள்ள முடியும்**.

HuRIMS தரவுத் தளம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை (Department Carder), ஒவ்வொரு அலுவலகத்திலும் உள்ள ஒவ்வொரு பதவிகளுக்கும் உரிய பணியாளர்களின் எண்ணிக்கை (Staff Count) தொடர்பான தகவல் மற்றும் பொதுவான தகவல்களைப் பெறுவதற்கான பொதுவான Common search வசதிகளையும் Dashboard மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

✓ Pro MS **முறைமையின் அடிப்படையில்** Dashboard **பின்வரும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்**.

Pro MS தரவுத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட திணைக்கள வாகனங்களுக்குரிய Monthly Discrepancy, View Island Report மற்றும் View Annual Report அவதானிக்கும் வசதியையும் Dashboard மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

7. Map Inventory Sales System (MISS) V2.0




நில அளவைத் திணைக்களத்தின் வரைபடங்களை விற்பனை செய்தல் மற்றும் நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் வாடிக்கையாளர் சேவை நிலையமும், 24 மாவட்ட அளவை அலுவலகங்கள் (கொழும்பு மாவட்ட நில அளவை அலுவலகங்கள் நீங்கலாக) மற்றும் அளவையியலும் படமாக்கலும் நிறுவனம் என்பன எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாக அபிவிருத்தி செய்யப்பட்ட MISS மென்பொருளின் இரண்டாவது பதிப்பு 2025 மே மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

8. Procurement Notice Management System

கொள்வனவு மற்றும் வழங்கல் பிரிவு, நில அளவை மற்றும் வரைபடத் தயாரிப்பு முகவர் நிலையம், அனைத்து மாவட்ட நில அளவை அலுவலகங்கள் மற்றும் அனைத்து மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகங்களும் திணைக்களத்தின் இணையத்தளத்தினூடாக தமது விலை மனு கோரும் அறிவித்தல்களை வெளியிடுவதற்கு இச்சேவையின் வழிவகை செய்யப்பட்டுள்ளது.






9. **எண்மத் தரவுகளுக்காக** Gov Pay **மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகளை அடையாளம் காணுதல்**

இதன் மூலம் பதிவுபெற்ற நில அளவையாளர்கள் எதிர்கால நில அளவீடுகளுக்காக மாவட்ட அளவை அலுவலகங்களிலிருந்து எண்மத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக Gov Pay ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் விபரங்களை அவதானிப்பதற்கு கணக்குப் பிரிவுக்கு இந்த வசதி வழங்கப்பட்டுள்ளது. அதற்குரிய மாதாந்த அறிக்கையையும் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

10. ZWCAD/ SDCAD **மென்பொருளைப் இற்றைப்படுத்துதல்**.

இதுவரை நில அளவீடு மற்றும் நிலப்படப் பணிகளில் பயன்படுத்தப்பட்ட ZWCAD 2008i மென்பொருள், அதனுடன் பயன்படுத்தப்பட்ட SDCAD மென்பொருள், மற்றும் SPCTools ஆகியவை மிகவும் பழைய பதிப்புகள் என்பதால், ZWCAD, இன் புதிய பதிப்பான ZWCAD 2025 இற்குப் பொருந்தக் கூடிய வகையில் SDCAD மற்றும் SPCTools நவீனமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டு திணைக்களத்தின் அனைத்து பணியாட்டொகுதியினருக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை, 98 நில அளவையாளர்கள் மென்பொருளைப் பயன்படுத்த குறியீடுகளைப் பெற்றுள்ளனர்.







11. Complaints / IAU / RTI **வலைப்பக்கத்தை உருவாக்குதல்**

நில அளவைத் திணைக்களத்தின் வலைத்தளத்தினூடாக பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட இணைப்புகளுக்கு மேலதிகமாக, இலஞ்சம் அல்லது ஊழலை எதிர்ப்பவர்களுக்கு முறைப்பாடுகள் மற்றும் கருத்துரைகளை வழங்குவதற்காக திணைக்களத்தினுள் உள்ளக அலுவல்கள் பிரிவொன்றும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், "Complaints/IAU/RTI" வலைப் பக்கமும் நிர்மாணிக்கப்பட்டு உள்ளது. இது ஊழலைத் தடுப்பதற்கும் நிறுவனத்திற்குள் இணக்கமான கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் உதவும். தவறான நடத்தையைப் புகாரளிப்பதை ஊக்குவிக்கவும், விசில்ப்ளோயர்களைப் பாதுகாக்கவும், இரகசியத்தன்மையைப் பேணவும் ஒரு பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.



12. **களப் புத்தகங்கள் மற்றும் நிலப்படங்களை வழங்குதல் / பெறுதல் தொடர்பான பழைய கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிக்க** eDocs **மென்பொருளை அபிவிருத்தி செய்தல்**.






eDocs மென்பொருள் மூலம் மாவட்ட நில அளவை அலுவலக ஆவணக் காப்பகத்தினால் வெளியிடப்பட்ட களப் புத்தகங்கள் மற்றும் நிலப்படங்களின் பழைய கொடுக்கல் வாங்கல் தகவல்களைக் கண்டறிவதற்கு ஏற்ற வகையுல் Field Book History Search மற்றும் Plan History Search சேவைகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

**இதற்கு மேலதிகமாக இவ்வருடத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன**.

- திணைக்கள மின்னஞ்சல்கள் தொடர்பான தரவுத் தளமொன்றைப் பேணுதல்.
- தலைமை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பிரிவுகள் மற்றும் அலுவலகங்களுக்கான தினசரி வருகை மற்றும் வெளியேறல் பதிவு முறைமையைப் பராமரித்தல்.
- பணியாட்டொகுதியினருக்கான வருடாந்த கணக்கெடுப்பை நடாத்துதல் மற்றும் மனித வள முகாமைத்துவ தரவுத்தளத்தை இற்றைப்படுத்துதல்.
- தேவைக்கேற்ப தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் விருத்தி செய்யப்பட்ட தரவுத் தளங்களை இற்றைப்படுத்தலும் பராமரித்தலும்.

III. **முறைமைப் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள்**.

- இலங்கை CERT இன் பணிப்புரைகளுக்கமைய, தரவுத் முறைமைகளை இற்றைப்படுத்துவதன் மூலம் தரவுத் முறைமைகளின் பாதுகாப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக, WAF (Web Application Firewall) இன் பயன்பாடு பற்றிய பயிற்சி மேற்கொள்ளப்பட்டதுடன், புதிய Firewall மற்றும் Web Application Firewall (WAF) முறைமை நிறுவப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.
- முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாடு மற்றும் தரவு ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்காக, தரவு மைய (Data Centre) பராமரிப்பு மற்றும் வழக்கமான காப்புப்பிரதிகள் (Regular Backups) மற்றும் பாதுகாப்பான சாதன வடிவமைப்பு (Secure Device Formatting) ஆகியவற்றைப் பின்பற்றுவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளன.
- திணைக்களத்தின் பிரிவுகளுக்கிடையிலான தரவுப் பகிர்வு செயன்முறையை மிகவும் பாதுகாப்பானதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றுவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- தலைமை அலுவலகத்தின் கணினி வலையமைப்புடன் இணைக்கப்பட்ட கணினிகளில் வைரஸ் தடுப்பு மென்பொருளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு, கள அலுவலகங்களில் மென்பொருள் நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது.
- சிசிடிவி முறைமைக்கு புதிய கேமரா, விரல் ரேகை மற்றும் முக அடையாளம் கொண்ட கதவு பூட்டு அமைப்பு (Door Lock System) ஆகியவற்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

IV. **துணைச் சேவைகள்**:

- பிரிவின் அடிப்படைப் பணிகள் மூலம் அன்றாட செயற்பாடுகளைத் தொடர்வதற்குத் தேவையான வன்பொருள் பராமரிப்பு (Hardware Maintenance) மற்றும் மென்பொருள் அடிப்படை பழுது தீர்வு (Software basic troubleshooting) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- இதற்காக கணினிகள் (PCகள்) மற்றும் மடிக்கணினிகளைச் சரிபார்த்தல் மற்றும் சரிசெய்தல், சாதன பாகங்களை மாற்றுதல் மற்றும் கணினி நிலைத்தன்மையை உறுதிப்படுத்த BIOS அமைப்புகளை மீட்டமைத்தல் ஆகியவை இதில் அடங்கும்.
- இதற்கு மேலதிகமாக, இயக்க முறைமைகளை (Windows) நிறுவுதல், சிக்கலான துவக்க பிழைகளை (Boot Errors) சரிசெய்தல் மற்றும் ArcGIS மற்றும் AutoCAD போன்ற சிறப்பு மென்பொருளை நிறுவுதல் ஆகியவையும் செய்யப்படுகின்றன.
- பயனர்களுக்கு முழு பயனர் மற்றும் இணைப்பு ஆதரவை வழங்க (User and Connectivity Support) 'Active Directory' இன் ஒருங்கிணைப்பு, அச்சுப்பொறிகள் மற்றும் கணினிகளுக்கு இடையிலான இணைப்புகளை சரிசெய்தல், 'Outlook' போன்ற மின்னஞ்சல் மென்பொருளை உள்ளமைத்தல் மற்றும் வலையமைப்பு மற்றும் வைஃபை இணைப்புகள் தொடர்பான சிக்கல்களை சரிசெய்ய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக, தகவல் தொழில்நுட்ப சாதனங்களை அடையாளம் காண ஒரு லேபலிடும் செயல்முறை தொடங்கப்பட்டது. முறைமைகளின் நீண்டகால செயல்திறனை மேம்படுத்த கணினி முன் பராமரிப்பு, வலையமைப்பு உள்கட்டமைப்பு சுத்தம் மற்றும் ஃபார்ம்வேர் இற்றைப்படுத்தல் (Firmware Updates) போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- திணைக்களத்தின் பிரிவுகளுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் தொடர்புடைய தீர்மானங்களை மேற்கொள்வதில் தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குதல்.
- மாநாட்டு அரங்குகளில் (Conference Halls) நடைபெற்ற விசேட நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களில் தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.

➢ **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**:

- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் ஹொரண தொழிற்பயிற்சி நிலையத்தின் மூன்று மாணவர்களுக்கு செய்முறைப் பயிற்சி வழங்கப்பட்டது.
- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான விசேட பயிற்சித் திட்டமானது அனுபவம் வாய்ந்த வெளி விரிவுரையாளரினால் பணியாட்டொகுதியினருக்கு நடாத்தப்பட்டது.

## 07. **புவிப்பாத்து நில அளவைக் கிளை**

**<u>வகிபாகங்கள்</u>**

முழு நாட்டையும் உள்ளடக்கிய நிலைகுத்து மற்றும் கிடைமட்ட புவிசார் பாலனப்புள்ளிகளை பராமரித்தல் மற்றும் புவிசார் கணக்கெடுப்பு, தரவு வங்கி பராமரிப்பு மற்றும் மேற்பார்வை தொடர்பான நடவடிக்கைகள். முழு இலங்கையும் உள்ளடங்கும் விதமாக தொடர்ச்சியாக செயற்படுகின்ற புவிப்பாத்து கட்டுப்பாட்டு நிலைய வலையமைப்பை (SLCORSnet) விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் மேல் மாகாணம் உள்ளடங்கும் விதமாக 06 இடங்களில் தொடர்ச்சியாகச் செயற்படுகின்ற புவிப்பாத்து கட்டுப்பாட்டு நிலைய வலையமைப்பை செயற்படுத்துதல்.

SLCORSnet **இலங்கை பூராவும்** விரிவுபடுத்துவதற்கான அடிப்படை செயற்பாடுகளை தயாரித்தலும் இலங்கைக்கான **புவியியல் மாதிரியை** (Geoid Model) விருத்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தலும்.

**<u>செயலாற்றுகை</u>**

புவிப்பாத்துப் பிரிவின் பணிகளை இலகுபடுத்துவதற்காக தற்பொழுது செயற்படுகின்ற பிரதான அலுவலகம், தியதலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவனம், வடக்கு (வவுனியா), வடமேல் மாகாணம் (குருணாகலை) புவிப்பாத்துப் பிரிவுகளுக்கு மேலதிகமாக வட மத்திய (பொலன்னறுவை) மற்றும் தெற்கு (மாத்தறை) ஆகிய புவிப்பாத்துப் பிரிவுகள் இரண்டு புதிதாக நிறுவப்பட்டன.

- **இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட அளவை நடவடிக்கைகள்**.

| **தொ. இல.** | **பணி** |
|---|---|
| 1 | கண்டி, மாத்தளை, குருநாகல், அநுராதபுரம், புத்தளம், கேகாலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் 2327 C கட்டுப்பாட்டுப் புள்ளிகளை நிறுவுவதற்கான அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளுதல். |
| 2 | CResMPA கருத்திட்டம் தொடர்பாக இலங்கை பூராவும் 100 B கட்டுப்பாட்டுப் புள்ளிகளுக்கான அடிப்படை மட்டங்களை எடுத்துக்கொள்ளுதல். |
| 3 | CResMPA கருத்திட்டம் தொடர்பான 140 புள்ளிகளுக்கு GSM RTK அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்ளுதல். |
| 4 | ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் புதிய பிரேரணையுடன் தொடர்புடைய 25 கட்டுப்பாட்டுப் புள்ளிகளை அவதானித்தல் மற்றும் அவற்றுக்கு ஆள்கூகளை ஒப்படைத்தல். |
| 5 | GSM – RTK முறையில் அளவீடுகளை மேற்கொள்வதற்காக விவரக் குறிப்புகள் தயாரிப்பதற்காக கள ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |

- **ஆண்டினுள் முன்னெடுக்கப்பட்ட விசேட சேவை வழங்கல்கள்**

| **தொ. இல.** | **பணி** |
|---|---|
| 1. | தனியார் நிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட 591 கட்டுப்பாட்டுப் புள்ளிகளின் தரவுகளைப் பரிசீலித்து துல்லியத் தன்மையை உறுதி செய்தல். |
| 2. | உரிமம்பெற்ற நில அளவையாளர்களிடம் இருந்து மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு கட்டுப்பாட்டுப் புள்ளிகளினதும் பீடக் குறிகளினதும் விபரங்களை வழங்குதல். |
| 3. | SLCORSnet ஊடாக அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சேவைகளை உரிமம் பெற்ற நில அளவையாளர்களுக்கு மற்றும் நில அளவையாளர்களுக்கு வழங்குதல் மற்றும் தேவைக்கேற்ப CORS அடிப்படைத் தரவுகளை வழங்குதல். |
| 4. | கட்டுப்பாட்டு புள்ளி மற்றும் பீடக் குறி தரவு அமைப்பை இற்றைப்படுத்துதல். |

## 08. **விஷேட நில அளவைகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு**

**வகிபாகங்கள்**

புதிய தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி விசேட அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அவசர நில அளவைத் தேவைப்பாடுகளை சிறப்பாக வழங்குதல் ,நிலத் தகவல்கள் தொடர்பில் சிக்கலான பிரச்சினைகளின் போது சுமுகமான முறையில் அவற்றைத் தீர்த்து ,மிகச் சிறப்பான முறையில் நிலத் தகவல்களை குறித்த குபிரிவினருக்முழு நாடும் முகங்கொடுக்கும் அவசர அனர்த்தங்கள் நிகழும்போது பொதுமக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு அவசியமான அளவீட்டு மற்றும் வரைபட

நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றிக் கொடுத்தல், டிரோன் உபகரணத்தைப் பயன்படுத்தி தரவுகளை ஒன்றுசேர்த்து பாரிய அளவிலான பொறியியல் அளவீடுகளை முன்னெடுத்தல், டிரோன் உபகரணத்தைப் பயன்படுத்தி வரைபடத்திற்கு அவசியமான தரவுகளைப் பெற்றுக் கொள்ளுதல், திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படுகின்ற அளவீட்டுப் பணிகளில் நில அளவையாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படுகின்ற அதனுடன் தொடர்புடைய விசேட மற்றும் அவசர அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**செயலாற்றுகை**

1) பொது நிர்வாக மற்றும் மாகாண சபைகள் அமைச்சு நிர்வாக அதிகாரத்தின் கீழ் உள்ள அரசாங்க பங்களாக்கள், வீடுகள் மற்றும் காணிகளை சுவீகரித்தல் தொடர்பான நில அளவீடுகளை மேற்கொள்ளுதல். 14 கோரிக்கைகள் உள்ளன .)
2) நீதிமன்றத்திற்கு விஞ்ஞான ஆதாரங்களை வழங்குவதற்காக ஜி.பி.எஸ் கருவி பகுப்பாய்வு அறிக்கைகளைத் தயாரித்தல். (08 அளவீட்டு கோரிக்கைகள்)
3) ஜா-எல – கம்பஹா மற்றும் கிரிந்திவெல – கனேமுல்ல வீதிகளில் நில அளவீடுகளை மேற்கொள்ளுதல்.(நீளம் 13.380 கிமீ)
4) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் நில அளவீடுகளை நடாத்துதல் (04 அளவீட்டு கோரிக்கைகள்)
5) மன்னார் காற்றாலை மின் நிலைய கருத்திட்டம் தொடர்பான நில அளவீடுகளை மேற்கொள்ளுதல். (அளவு 90.1011 ஹெக்டேர்)
6) அம்பாறை பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நிலைமையை இனங்காண நில அளவீடுகளை மேற்கொள்ளுதல். (அளவு 1500 ஹெக்டேர்) (ட்ரோன் அளவீடு)
7) மத்தள விமான நிலையத்துடன் தொடர்புடைய தடை நில அளவீடுகளை நடாத்துதல்.
8) மத்தள விமான நிலையத்துடன் தொடர்புடைய வீதி நில அளவீடுகளை நடாத்துதல். (LS/CS & நிலப்பரப்பு அளவீடு) (நீளம் 9.741 கிமீ)
9) எப்பாவலையில் பாஸ்பேட் படிவுகளை அளவிடுதல். (அளவு 1980 ஹெக்டேர்) (ட்ரோன் அளவீடு)
10) இலங்கை விமானப்படையின் திசைகாட்டி இயந்திரங்களின் அளவுத்திருத்தம்.
11) அத்திடிய ருக்அத்தானை வீதியின் நீர் பிரச்சினை தொடர்பான நில அளவீடுகளை நடாத்துதல். (அளவு 2.6673 ஹெக்டேர்)
12) வெலிகம மற்றும் மிரிஸ்ஸ பிரதேசத்தினுள் ட்ரோன் அளவீடு ஒன்றை நடாத்துதல். (அளவு 33.54 ஹெக்டேர்)
13) வடமராட்சி பிரதேச செயலாளரின் வேண்டுகோளின் பேரில் வடமராட்சி பிரதேசத்தில் ட்ரோன் அளவீடு ஒன்றை நடாத்துதல். (அளவு 121.4060 ஹெக்டேர்)
14) பத்தரமுல்ல அபேகம வளாகத்தில் நில அளவீடுகளை மேற்கொள்ளுதல். (அளவு 5.9814 ஹெக்டேர்)
15) கொழும்பு மாவட்ட JME ஆல் முன்வைக்கப்பட்ட நில அளவீட்டுக் கோரிக்கைகள் (04 நில அளவீட்டுக் கோரிக்கைகள்)
16) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற GPS ஒருங்கிணைப்புகளின் பிரகாரம் பிரதேசங்களைக் காட்டும் வரைபடமொன்றைத் தயாரித்தல்.
17) யால பலட்டுப்பான சுற்றுலா வலயத்தில் தாங்கல் வலய எல்லை நிர்ணயக் கோட்டைக் குறித்தல்.

18) இலங்கை தபால் திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரில் உருவரைக் கோட்டு வரைபடமொன்றை உருவாக்குதல்.(அளவு 0.2713 ஹெக்டேர்)

19) சொபதனவி லிமிட்டெட் மற்றும் வத்தளை பிரதேச செயலாளரின் வேண்டுகோளின் பேரில் கடலின் அடிப்பகுதியில் குழாய்களை நிறுவுவது தொடர்பான சுவட்டு வரைவைத் தயாரித்தல்.

20) காமினி பி. தொடன்வல கம்பனியின் வேண்டுகோளின் பேரில் மஹா இந்துருவை பிரதேசத்தில் ட்ரோன் அளவீடு ஒன்றை நடாத்துதல்.(அளவு 1.1348 ஹெக்டேர்)

21) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க மாவட்ட கடற்றொழில் முகாமைத்துவ வலயங்களை வரையறை செய்தல்.

2025 **ஆம் ஆண்டில்**, **மேற்கண்ட நில அளவீடுகள் மூலம் அரசாங்கம் ரூ**. 34,946,206.21 **சம்பாதித்தியத்தை ஈட்டியுள்ளது**.

## 09. **புவியியல் தகவல்கள் பிரிவு**

**<u>வகிபாகங்கள்</u>**

- வான்வழிப் புகைப்படங்கள், செய்மதிப் புகைப்படங்கள், UAV மற்றும் LiDAR தரவுகளைப் பயன்படுத்தி படமாக்கல் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவசியமான தரவுகளைச் சேகரித்தல்.
- LiDAR தரவின் அடிப்படையிலான அதிக செம்மையுடன் கூடிய உயர் தரத்திலான மற்றும் நம்பகத் தன்மை மிக்க புவியியல் தரவுகளை வழங்குதல்.

**<u>செயலாற்றுகை</u>**

2025 **ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள்**.

- 1920 சதுர கிலோ மீட்டர் உள்ளடங்கும் விதமாக செய்மதி புகைப்படங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட இரு பரிமாணத் தரவுகளைப் பயன்படுத்தி 10,000 இடவிளக்கத் தரவுப் பத்திரங்கள் 48 இற்றைப்படுத்தப்பட்டன.
- வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய 11.73 சதுர கிலோ மீட்டர் உள்ளடங்கும் விதமாக LiDAR point clouds தயாரித்து DSM வடிவமைத்தல்
- வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைய LiDAR தரவுகளை வெளியிடுதல். – 2132.55 சதுர கிலோ மீட்டர்,

| | |
|---|---|
| Point cloud | 928.090 Sq.km |
| DEM | 3593.10 Sq.km |
| உருவரைக் கோடுகள் | 2400.48 Sq.km |
| Rapid Ortho Photo | 243.52 Sq.km |

## 9.2 **தொலை உணர் பிரிவு**

**வகிபாகங்கள்**

வான்வழி புகைப்படங்கள், செயற்கைக்கோள் படங்கள், ஆளில்லா விமானங்கள் மற்றும் LIDAR தரவுகளைப் பயன்படுத்தி வரைபடம் மற்றும் பிற மேம்பாட்டுத் திட்டங்களுக்கான புவியியல் தரவுகளை சேகரித்தல்.

- இலங்கையின் வடக்குப் பகுதியில் 8000 சதுர கிலோமீட்டர் பரப்பளவை உள்ளடக்கிய உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி 1: 50,000 வரைபடங்கள் கொண்ட 20 தாள்கள் 2025 இல் புதுப்பிக்கப்பட்டுள்ளன .
- 1:10,000 வரைபடத் தொடரின் 25 தாள்கள் 2025 இல் 1360 சதுர கிலோமீட்டர் பரப்பளவை உள்ளடக்கிய உயர் தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களைப் (World View) பயன்படுத்தி முடிக்கப்பட்டுள்ளன.
- குருநாகல் மற்றும் இரத்தினபுரி பிரதேசங்களில் 1000 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட World View செயற்கைக்கோள் படங்களுடன் 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 1:10,000 அளவுகோலின் 25 பக்கங்களை உள்ளடக்கியது .
- 2025 நவம்பரில் "தித்வா" சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலையில் இலங்கையை உள்ளடக்கிய Geofen3, Huan Jing, Sentinel1 மற்றும் Sentinel2 ஆகியவற்றின் செயற்கைக்கோள் படங்கள்.

## 9.3 புவிசார் தகவல் முறைமைப் பிரிவு

**வகிபாகங்கள்**

- தேசிய தேவைகளையும், பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்வதற்காக, புவியியல் தகவல் முறைமை ஒன்றினை உருவாக்குதல், தரவுகளை சேசகரித்தல், பராமரித்தல் இற்றைப்படுத்துதல் மற்றும் அதனை விநியோகித்தல்.

**செயலாற்றுகை**

- 1: 10,000 பத்திரத்தின் 117 இற்காக இற்றைப்படுத்தப்பட்ட புவிசார் தகவல் முறைமையைப் பூரணப்படுத்துதல். (3.2Version)
- நிர்வாக எல்லைகளை உள்ளடக்கிய பின்னர் தடையற்ற (Seamless) தரவு முறைமை ஒன்றை 1: 50,000 அளவிடையில் (1: 50K tile) தயாரித்தல்.
- நிர்வாக தரவுத்தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட வாழ்க்கைத் தளக் குறியீடுகள்.
- 2024 ஆம் ஆண்டில் புதிதாக அறிவிக்கப்பட்ட பரப்பளவுக்கு ஏற்ப நிர்வாக எல்லைகளை முறைப்படுத்தல்.
- 2025 ஆம் ஆண்டுக்கான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்குத் தேவையான புள்ளிவிபர கையேடு, புள்ளிவிபர தொகை நூல் மற்றும் புள்ளிவிபர தரவுத் தாள்களைத் தயாரித்தல்.
- 2025 ஆம் ஆண்டில் தித்வா சூறாவளியால் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களுடன் தொடர்புடைய வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் எண்மத் தரவுகளைத் தயாரித்தல்.
- 5 ஆற்றுப்படுகைகளின் எண்மத் தரவுத்தளங்கள் தயாரித்தல்

## 10. வரைபடமாக்கல் பிரிவு

**வகிபாகங்கள்**

திணைக்களத்தின் பணிகளில் முக்கிய பிரிவான அபிவிருத்தி விடயங்களுக்குத் தேவையான இட விளக்கப்படம் மற்றும் பல்வேறு விடயங்களின் கீழ் கருப் படத்தை உருவாக்குதல், நுகர்வோரின் வேண்டுகோளின்படியும் வரைபடங்களை உருவாக்குதல் ,வரை படங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து உற்பத்திகளையும் அச்சிடுதல் மற்றும் எண்தரவு முறையில் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல். இதற்கு மேலதிகமாக தியதலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவனத்தின் மற்றும் சகல மாவட்ட அலுலகங்கள் மூலம் அனைத்து அச்சிடப்பட்ட வரைபடங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் குரியர் சேவையின் (Courier Service) மூலமும் வாடிக்கையாளர்களுக்கு வபைடங்கள் மற்றும் எண்மத் தரவுகளை வீட்டிற்கே வரவழைத்துக் கொள்ளும் வசதிகள் பிரதான அலுவலகத்தின் வாடிக்கையாளர் சேவை மத்திய நிலையத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

**செயலாற்றுகை**

### இடவிளக்க வரைபடங்களை வரையும் அலகின் ஊடாக பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- 1:50,000 இடவிளக்க வரைபடக் கோவையின் இரண்டாம் பதிப்பின் கீழ் 24 வரைபடங்களைத் தயாரித்தல்..
- பொதுமக்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் 1:10,000 அளவிலான 99 வரைபடங்களைத் தயாரித்தல்.

**ஆய்வுப் பொருள்சார் வரைபடப் பிரிவால் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்**

- ஊவா மாகாண வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- நகர வரைபடங்கள் - (காலி மற்றும் கம்பஹா வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன,அம்பாந்தோட்டை மற்றும் கண்டி வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.)
- பாடசாலை வரைபடங்கள் - இயற்கைத் தாவரங்கள் மற்றும் கனிம வளங்களின் வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. மண், மழைவீழ்ச்சி, வெப்பநிலை, புராதன இராச்சியத்தின் விரிவாக்கம், மகாவலி அபிவிருத்தி கருத்திட்டங்கள், காணி பயன்பாடு, தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை, நீர்ப்பாசன திட்டம் மற்றும் நெல் பயிர்ச்செய்கை பிரதேசங்களின் வரைபடங்கள் (மும்மொழி) தயாரிக்கப்பட்டுள்ளன.
- வீதி வரைபடம் (ஆங்கிலம்) தயாரிக்கப்பட்டுள்ளது.
- சுற்றுலா வலய வரைபடம் (வரலாற்றுப் பகுதிகள்) - தயாரிப்பு நடைபெற்று வருகிறது.
- சுற்றுலா வரைபடத்தின் பின்பக்கம் தயாராக உள்ளது.
- உலக தட்பவெப்ப மண்டல வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**விசேட வரைபடப் பிரிவினால் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்**

- வாடிக்கையாளர்களின் கோரிக்கைக்கு அமைய மொத்தம் 1984 வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்**

- இட விளக்கப்படங்கள் வரைதல், விசேட வரைபடங்கள், ஆய்வுப் பொருள்சார் வரைபடங்கள் ஆகிய பிரிவுகளின் வரைபடங்களின் தரக்கட்டுப்பாடு.

2025 **ஆம் ஆண்டில் வரைபட உற்பத்தியின் முன்னேற்றம் பின்வருமாறு**.

| **வரைபடங்களின் வகைகள்** | **அலகு** | **ஆண்டு இலக்கு** | **அடைந்த முன்னேற்றம்** |
|---|---|---|---|
| பொதுமக்களின் தேவைகளின் அடிப்படையில் 1:10,000 வரைபடங்கள் தயாரித்தல் | வரைபடங்களின் எண்ணிக்கை | 108 | 99 |
| 1:50,000 இடவிளக்க வரைபடங்களின் இரண்டாம் பதிப்பு | | 24 | 24 |
| வாடிக்கையாளரின் கோரிக்கைகள் தொடர்பான வரைபடங்களைத் தயாரித்தல் (எண்ம மற்றும் அச்சிடப்பட்ட) | | 360 | 646 |
| ஆய்வுப் பொருள்சார் வரைபடங்கள் | | 22 | 14 |




**வரைபடங்களை விற்பனை செய்தல்**.

அச்சு வரைபடங்கள், எண்ம வரைபடங்கள் மற்றும் தரவுகளை விற்பனை செய்வதன் மூலம் மற்றும் ஆக்கியோன் பங்கை அறவிடுவதன் மூலம் பின்வருமாறு வருமானங்கள் ஈட்டப்பட்டுள்ளன .

நில அளவையாளர் நாயக அலுவலகம்

| | | |
|---|---|---|
| அச்சு வரைபடங்களை விற்பனை செய்தல் | = ரூபா. | 4,854,496.62 |
| வாடிக்கையாளர்களின் தேவைப்பாட்டிற்காக விஷேட வரைபடங்களை விற்பனை செய்தல் | =ரூபா. | 786,055.00 |
| எண்மத் தரவுகளை வெளியிடுவதன் மூலமான வருமானங்கள் | =ரூபா. | 4,574,197.82 |
| மொத்தம் | =ரூபா. | 10,214,749.44 |

**வரைபடமாக்கல் பிரிவினூடாக மேற்கொள்ளப்பட்ட விஷேட பணிகள்**

- நிலப்பட வர்ண அச்சுப்பதிப்பு அலகு மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளான Layout தயாரித்தல், மற்றும் ஏனைய திணைக்களத் தேவைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட 2025 ஆம் ஆண்டிற்குரிய சகலவையும் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன.
- புத்தகங்கள் கட்டும் பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் களப் புத்தகங்கள் மற்றும் PE பேரேடு கட்டுதல் பிரதான செயற்பாடாக அமைவதுடன் பணிகளானது துண்டுகளின் அளவிற்கு அமைய அனைத்து பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2025 **ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் விசேட செயற்பாடுகளில் கீழ்வரும் புத்தகங்கள் மற்றும் பேரேடுகள் கட்டுதல் உள்ளடக்கப்பட்டுள்ளன**.

| | | |
|---|---|---|
| வெளிக்களப் புத்தகங்கள், மட்டம் புத்தகங்கள் | - | 5350 |
| புத்தகம் கட்டுதல் | - | 996 |
| ஏனைய ஒட்டுதல் | - | 82 |

இந்த ஆண்டில் கீழ்வரும் அளவுகளில் வரைபடங்கள், புத்தகங்கள் மற்று மாதிரிப் படிவங்கள் அச்சிட ஆவன செய்யப்பட்டன.

| பொருட்கள் | வருடாந்திர இலக்கு | அடையப்பட்ட முன்னேற்றம் |
|---|---|---|
| <u>நில அளவை ஆவணம்</u> | | |
| Q.F.S. (கால தாள்கள்) | 15000 | 18800 |
| A4 நிலப்படங்கள் | 1500 | 5500 |
| கா. வி. ப. பக்கங்கள் | 45000 | 50000 |
| களப் புத்தகங்களின் உள் பக்கங்கள் | 49000 | 45120 |
| களப் புத்தகங்கள் உள் அட்டைகள் | 7000 | 6500 |
| <u>மறுபதிப்பு</u> | | |
| 50K இட விளக்க நிலப்படங்கள் | 6000 | 8000 |
| 50K பாகங்கள் | 10000 | 17540 |
| நகர வரைபடங்கள் | 1000 | 1460 |
| சுற்றுலா வரைபடம் – ஆங்./ சிங். | 6000 | 6700 |
| எல்லை வரைபடங்கள் | 8000 | 12800 |
| <u>புதிய அச்சிடல்கள்</u> | | |
| ஆய்வுப் பொருள்றசார் வரைபடங்கள் | 2000 | 5330 |
| இதர / வாடிக்கையாளர் கோரிக்கைகள் | 1000 | 1500 |

## 11. **புவியியல் பெயரீட்டுப் பிரிவு**

**<u>வகிபாகங்கள்</u>**

இலங்கை மக்களின் கலாச்சார உரிமையுடன் பின்னிப் பிணைந்துள்ள தேசிய ஒற்றுமைக்கு துணைபுரியும் சரியானதும், உறுதியானதுமான புவியியல் பெயர்கள் மற்றும் தரவுகள் கட்டமைப்பு ஒன்றினைத் தரப்படுத்தலின் ஊடாக அறிமுகம் செய்தல்.

**<u>செயலாற்றுகை</u>**

| செயற்பாடு | அலகு | வருடாந்த இலக்கு | அடைந்த முன்னேற்றம் |
|---|---|---|---|
| வலைத்தளத் தரவு முறைமையினூடாக பெறப்பட்ட பொதுமக்களின் கருத்துக்களை உள்ளடக்குதல் | பொதுமக்கள் கருத்துக்களின் எண்ணிக்கை | 600 | 845 |
| புவியியல் பெயரீட்டுத் தரவு முறைமையின் புவியியல் பெயர்களை உரோம மயப்படுத்துதல். | புவியியல் பெயர்களின் எண்ணிக்கை | 600 | 238 |
| புவியியல் பெயர்களை சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழிகளில் திருத்துதல் மற்றும் மொழிபெயர்ப்பு. | புவியியல் பெயர்களின் எண்ணிக்கை | 36000 | 142775 |
| சாலை அடுக்கு, நீர் அடுக்கு மற்றும் இடப்பெயர் அடுக்கு ஆகியவற்றை சுத்திகரித்தல் மற்றும் இற்யைப்படுத்துதல். | பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | 2880 | 1976 |

## 12. **ஆவண முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் நியமங்கள் பிரிவு**

**<u>வகிபாகங்கள்</u>**

1800 ஆம் ஆண்டு முதல் நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட நிலப்பட பிரதிகளும் தற்போது தயாரிக்கப்படுகின்ற பிரதிகளும் இப்பிரிவில் பேணப்பட்டு வருகின்றன.

இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள்

- பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க நிலப்படப் பிரதிகளை விநியோகித்தல்
- களத்தில் அளவீடுகள் முன்னெடுக்கப்பட்டு தயாரிக்கப்படும் அனைத்து நியதிச்சட்ட நிலப்படங்களினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இந்த கிளையில் பாதுகாப்பாக கோப்புச் செய்வதன் மூலம் ஆவணக் காப்பகத்தை இற்றைப்படுத்திப் பராமரித்தல்.
- பழைய நிலப்படங்களில் புதிய அளவீடுகள் செய்யப்பட்டுள்ள போது அதற்கேற்ப ஆவணங்களை திருத்தி பராமரித்தல்.
- காணி நிருணயத் திணைக்களத்தின் காணி நிருணயப் பணிகளை மேற்கொண்டு இறுதி அறிக்கைகளை அனுப்பி வைத்ததன் பின்னர் இறுதிக் கிராமிய நிலப்படம் மற்றும் இறுதி இடவிளக்கப் படங்களைத் தயாரித்தல்.
- 200 வருடங்களுக்கு முற்பான ஆவணங்களை அழியாமல் பாதுகாத்து வைப்பதற்காக ஆவணங்களை பழுதுபாரத்தல் மற்றும் பாதுகாப்பு முறைமைக்கு ஏற்ப ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
- DMS தரவு முறைமையை இற்றைப்படுத்திப் பராமரித்தல்.
- கள நடவடிக்கைகளுக்காக ஆய்வுக்கு முந்திய தகவல்களை (L $96^{A}$) வழங்குதல்.

**<u>செயலாற்றுகை</u>**

### 12.1 **நிலப்பட பிரதிகளை வழங்குதல்**

ஆவண முகாமைத்துவம் மற்றும் தொழில்சார் நியமங்கள் பிரிவின் மூலம் 2025 ஆம் ஆண்டில் 4638 நிலப்படப் பிரதிகள் வெளியிடப்பட்டு உள்ளதுடன், அதன் மூலம் ரூ. 4,779,914.00 வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

## 12.2 **பழைய ஆவணங்களைப் இற்றைப்படுத்துதல்**.

நில அளவை திணைக்களத்தின் அனைத்து கள அலுவலகங்களாலும் நில அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்படும் நியதிச் சட்ட நிலப்படங்கள் அந்தந்த பகுதிக்கு ஏற்ப வெவ்வேறு வகைகளில் தயாரிக்கப்படுகின்ற நிலப்படங்கள் ஆகும். அதாவது, அ.நி/ இ.கி.நி./ இ.இ.நி./ கி.நி./ கடத்திரள் வரைபடங்கள் போன்றவை. பழைய நிலப்படங்களால் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு புதிய நில அளவீட்டின் மூலம், புதிய நிலப்படங்களைத் தயாரிக்கும் போது பழைய நிலப்படங்களின் மாட்டேற்றைக் குறிப்பிட்டு ஆவணக்காப்பகத்தில் உள்ள ஆவணங்களையும் இற்றைப்படுத்தலுக்கு உட்படுத்தும்.

| | |
|---|---|
| 2025 ஆண்டின் தொடக்கத்தில் இற்றைப்படுத்த எஞ்சியிருந்த நிலப்படங்களின் எண்ணிக்கை | 6660 |
| 2025 ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிலப்படங்களின் எண்ணிக்கை | 10320 |
| 2025 இல் இற்றைப்படுத்தப்பட்ட நிலப்படங்களின் எண்ணிக்கை | 12423 |
| ஆண்டின் இறுதியில் மீதமுள்ள நிலப்படங்களின் எண்ணிக்கை | 4557 |

## 12.3 **பழைய நிலப்படங்களைப் பாதுகாத்தல்**

- நில அளவைத் திணைக்களத்தினால் கடந்த 225 ஆண்டுகளாக தயார் செய்யப்பட்ட நிலப்படங்கள் சேதமடையாமல் பாதுகாக்கும் நடவடிக்கைகளைப் போன்றே பழுதுபார்த்தல் பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கான செயலமர்வுகளை நடாத்துதல் இப்பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படும். அதற்கிணங்க ஒவ்வொரு மாவட்ட நில அளவை அலுவலகத்திலிருந்தும் நில அளவீட்டுக் கள உதவியாளர்கள் 05 பேர் வீதம் அழைக்கப்பட்டு இவ்வாறு செயல்முறை பயிற்சி வழங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டில் ஆவண முகாமைத்துவப் பிரிவினால் பழுதுபார்க்கப்பட்ட நிலப்படங்களின் எண்ணிக்கை 4497 ஆகும்.
- புலனாய்வுக் காப்பகத்தில் ஆவணங்களை வைத்திருப்பதற்காக 04 புதிய இரும்பு அலமாரிகள் நிறுவப்பட்டன.
- மத்திய ஆவணக் காப்பகத்தின் ஒரு பகுதி குளிரூட்டப்பட்டதுடன், உரித்து நிலப்படங்களும் பழைய பதிவேடுகளும் அங்கு சேமித்து வைக்கப்பட்டு ஆவணங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- அதன்படி, 2025 ஆம் ஆண்டில் DMS தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்ட புதிய/பழைய நிலப்படங்களின் எண்ணிக்கை 36,500 ஆகும்.

## 12.4 **பழைய நில அளவை விவரங்களை வழங்குதல்** ( L 96 $^{A}$ **தகவல்**)

களப்பணியின் பொருட்டு அளவீட்டிற்கு முந்திய தகவலை (L 96$^{A}$ மூலம்) வேண்டுகோள் விடுக்கும்போது அத் தகவல்களை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

அதற்கமைய, 2025 இல் வழங்கப்பட்ட L 96$^{A}$ தகவல் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை 2116 ஆகும்.

# 13. **காணி தகவல் முறைமைகள் பிரிவு**

**வகிபாகங்கள்**

பொதுமக்களின் தேவைக்கேற்ப காணி தகவல்களை வழங்கக் கூடிய இற்றைப்படுத்தப்பட்ட காணித் தகவல் தொகுதியை நடாத்திச் செல்லுதல்.

**செயலாற்றுகை**

கள அளவீடுகளின் போது உருவாக்கப்படுகின்ற நிலப்படங்களுடன் தொடர்புடைய எண்மத் தரவுகள், மாவட்ட நில அளவை அலுவலகம் மற்றும் காணி தகவல் தரவு முறைமைகள் பிரிவு என்பவற்றின் தரப் பரிசோதனையின் பின்னர் முன்கூட்டியே தயாரித்து அத்தரவுகளின் மீள் பயன்பாட்டிற்காக இணையவழி செயலி (Web Application) மூலம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

2025 ஆம் ஆண்டில், 134,197 துண்டுகளைக் கொண்ட 5,218 ஆவணங்கள் கடத்திரள் அளவீடுகளின் கீழ் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டன. இந்த வருட இறுதியில், காணி தகவல் முறைமைப் பிரிவிடம் 2,347,545 கடத்திரள் நில அளவீடுகள் மற்றும் 18,399 விரிவாக்கப்பட்ட நில அளவீட்டுத் துண்டங்கள் அடங்கிய 46,861 ஆவணங்களின் தரவுத் தளம் உள்ளது.

மேலும், திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட பழைய நிலப்படங்களை வாடிக்கையாளர்களை இணையத்தளம் மூலம் பயன்படுத்த உதவும் நோக்கத்துடன், பழைய நிலப்படங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு, 9,089 எல்லைகள் மற்றும் 41,742 துண்டுகள் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சர்வதேச சந்தை தேவையை பூர்த்தி செய்வதற்காக இறப்பர் காணிகளின் வரைபடமாக்கல்/ பதிவு செய்யப்பட்ட டிஜிட்டல் முறைமையை வினைத்திறனுடன் பயன்படுத்துவதன் மூலம் இறப்பர் கைத்தொழில் துறையை நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நில அளவைத் திணைக்களம் வரைபடமாக்கப்பட்ட இறப்பர் காணித் துண்டுகளை தரவுத் தளத்தில் இணைத்து அந்த இறப்பர் அடுக்குகளுக்கான QR குறியீடுகளை வழங்கி வருகின்றது.




இலங்கையில் நில அளவீடு செய்யப்படாத சுமார் 10 மில்லியன் காணி துண்டுகளை காணி தகவல் முறைமை (ILAS) இணைய சேவையுடன் ஒருங்கிணைப்பதற்கான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நில அளவையாளரைத் தவிர வேறு ஒரு உத்தியோகத்தர்கள் பயன்படுத்தக்கூடிய விதத்தில் "BhomiSketch" வலை பிரயோகி தயாரிக்கப்படும், மற்றும் இந்த தரவுகளை சேகரிப்பதற்கான தொடர்புடைய நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப "BhomiSketch" வலை பிரயோகி தயாரிக்கப்பட்டு வலை பயன்பாடு தனிப்பயனாக்கப்படும். தரவை உள்ளிடும் நேரத்தில் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஒரு தரவுப் பலகை (Dashboard) அமைக்கப்படும்.

- முன்னோடித் திட்டமாக தெரிவு செய்யப்பட்ட 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான "BhomiSketch" இணையப் பயன்பாட்டைப் பயன்படுத்தி 7,627 காணித் துண்டுகளின் விபரங்கள் காணி தரவுத்தளத்தில் வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த தரவுகளில் மொனராகலை மாவட்டத்தின் அனைத்து காணிகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.






- வன பாதுகாப்புத் திணைக்களம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கு ஒருங்கிணைந்த காணி நிர்வாக முறைமை (iLAS) இணைய சேவை மற்றும் "BhomiSketch" இணையப் பயன்பாடு மற்றும் இந்த இணையப் பயன்பாட்டைப் பயன்படுத்தி களத்தில் காணி தகவல்களை எவ்வாறு சேகரிப்பது என்பது பற்றி அறிவூட்டுவதற்காக செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு இந்த இணையப் பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

**இவ்வாண்டில் கீழ்க்கண்ட பணிகள் வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் மேற்கொள்ளப்பட்டன**.

- எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப காணி தகவல் தரவுத் முறைமையுடன் தொடர்புடைய மென்பொருளை இற்றைப்படுத்துதல் மற்றும் பேணுதல்.

- கடத்திரள் வரைபடங்களிலிருந்து காணித் துண்டு மேற்கோள்களைப் பெறுவதற்கு பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கான "TitlePlot" கருவியை மேம்படுத்துதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.

- காணி விபரப் பட்டியல் தரவுத் தொகுதியின் (TLDMS) தரவுகளை காணி தகவல் முறைமையினுள் தானாக மீட்டெடுப்பதற்குத் தேவையான மென்பொருளை தரமுயர்த்துதல் மற்றும் இற்றைப்படுத்துதல் மற்றும் நில அளவைக் கோரிக்கைகள் தரவுத் தொகுதியிலிருந்து (SRIMS) காணி தகவல் முறைமை பிரிவுக்கு தரவுகளை தானாக தரவிறக்கம் செய்வதற்கு தேவையான மென்பொருளை மேம்படுத்துதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.

- 25 மாவட்டங்களில் உள்ள அனைத்து கடத்திரள் வரைபடங்களின் தரவு இடப்பெயர்வு பணிகளை நிறைவு செய்தல்.

- டிஜிட்டல் தரவு முகாமைத்துவம் மற்றும் காணி தகவல் தரவுத் தொகுதிக்கான துல்லியமான தரவுகளைத் தயாரித்தல் என்பவற்றில் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அரசாங்க நில அளவையாளர்கள், நில அளவைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேவையான வளங்களை வழங்குதல்.

- கொழும்பு, களனி மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களின் 23 இளங்கலை பட்டதாரிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குதல்.

## 14. **தேசிய இடஞ்சார்ந்த தரவு உட்கட்டமைப்பு கிளை**

**<u>வகிபாகங்கள்</u>**

நாட்டின் தேசிய இடஞ்சார்ந்த தரவு உட்கட்டமைப்பு (NSDI) தளத்தில் ஒரு முக்கிய பங்குதாரராக, நில அளவைத் திணைக்களம், இடஞ்சார்ந்த தரவு உட்கட்டமைப்பு பிரிவின் (NSDI) மூலம் தரவு மாதிரிகள் மற்றும் தரவு சேவைகளை தேசிய அளவிலான இடஞ்சார்ந்த தரவு உட்கட்டமைப்பு (NSDI) மாதிரியுடன் ஒருங்கிணைப்பதற்கான முறைகள் மற்றும் செயல்முறைகளை மேம்படுத்தி வருகிறது. மேற்கண்ட இலக்குகளை அடையும் நோக்கத்துடன் இடஞ்சார்ந்த தரவு உட்கட்டமைப்பு பிரிவு (NSDI) பின்வரும் செயல்பாடுகளில் ஈடுபடுதல்.

NSDI தரவுகளின் அடிப்படையில் தரவு (meta data) கட்டமைப்புடன் தொடர்புடைய ISO 19115 (தரவு) தரங்களைப் பின்பற்றும் ஒரு நிகழ்நிலைச் சேவையாக அபிவிருத்தி செய்தல்.

NSDI தரவு மாதிரியுடன் பொருந்துவதற்காக நில அளவைத் திணைக்களமானது 10K தரவு அகராதி மற்றும் தரவு பட்டியலைப் இற்றைப்படுத்துதல்.

**<u>செயலாற்றுகை</u>**

- SD தரவு மாதிரியை NSDI தரவு மாதிரிக்கும் NSDI தரவு மாதிரியை SD தரவு மாதிரிக்கும் பரிமாற்றம் செய்ய GIS கருவிகளை தயார்படுத்துதல்.
- 1:10,000 மெட்டாடேட்டா சேவை உருவாக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள தகவலுடன் 10K தரவு அகராதி இற்றைப்படுத்தப்பட்டது.

## 15. **ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு**

**<u>வகிபாகங்கள்</u>**

திணைக்களத்தின் செயலாற்றுகையின் மீது பாதிப்புச் செலுத்தும் பலவீனமான துறைகளை அடையாளம் கண்டு அவற்றை முறைமைப்படுத்துவதற்காக உரிய முன்மொழிவுகளை முன்வைத்தல், திணைக்களத்தின் நில அளவை மற்றும் வரைபடங்களுக்குத் தேவைப்படும் புதிய வழிமுறைகளைக் கண்டறிதல் மற்றும் அவை திணைக்களத்தின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் என்பவற்றை அதிகரிப்பதற்காக அறிமுகம் செய்தல் புதிய தொழிநுட்ப வழிமுறைகளை ஆராய்ச்சிகளின் ஊடாக அறிமுகம் செய்தல், புதிய தொழிநுட்பத்தினைக் கையாளுவதற்காக அலுவலர்களைப் பயிற்றுவித்தல், திணைக்கள வரைபடங்கள், திட்ட வரைபடங்கள் ஆகியவற்றின் நிலைமைகள் தொடர்பான விவரக் குறிப்புக்களை பாதுகாத்தல், திணைக்கள அளவையியல் ஒழுங்குமுறைகள் மற்றும் மேலாண்மைக் கட்டளைகள் என்பவற்றை நவீன தொழில்நுட்ப முறைக்க ஏற்புடையதான முறையில் மாற்றியமைத்தல்.

**<u>செயலாற்றுகை</u>**

i. நில அளவை நாயகம் அலுவலகத்தின் புதிய கேட்போர் கூடத்தில் 2024.03.02 ஆம் திகதி சர்வதேச நில அளவை தின உத்தியோகபூர்வ கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்து வெற்றிகரமாக நிறைவு செய்தல்.
ii. நில அளவைத் திணைக்களத்தின் 225 ஆவது ஆண்டு நிறைவு தொடர்பான உத்தியோகபூர்வ வைபவத்தை 2025.08.02 ஆம் திகதி நில அளவையாளர் நாயகம் அலுவலகத்தின் புதிய கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நிறைவு செய்தல்.
iii. நில அளவைத் துறையின் 225-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 02.08.2025 ஆம் திகதி நினைவு முத்திரை வெளியிடப்பட்டது.
iv. நில அளவை திணைக்களத்தின் நில அளவை சஞ்சிகையின் 91 ஆவது பதிப்பு 02.08.2024 அன்று வெளியிடப்பட்டது.
v. நில அளவை சஞ்சிகையின் 91 ஆவது பதிப்பின் அட்டைப்படத்தை உருவாக்குவதற்கு போட்டி ஒன்று நடாத்தப்பட்டது, அதன் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதற்கும், இதழுக்கு கட்டுரைகளை வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு சஞ்சிகையும் வழங்கப்பட்டது.
vi. திணைக்களத்தினுள் உத்தியோகபூர்வ ஊடக செய்தி சேகரிப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல். (நில அளவையாளர் நாயகம் ஓய்வு பெறுதல், வேலை ஆரம்பம், 225 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் சர்வதேச நில அளவை தினம்)

## 16. **காணி உரித்துப்பதிவு அளவைப் பிரிவு**

<u>**வகிபாகங்கள்**</u>

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துகள் பதிவுசெய்யும் சட்டத்திற்கேற்ப, உரித்துகள் நிருணயிக்கும் ஆணையாளர் நாயக அலுவலகம், உரித்துகள் பதிவாளர் நாயக அலுவலகம் என்பவற்றுடன் ஒன்றிணைந்து 'பிம்சவிய' திட்டத்தின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்துக் குடிகளதும் காணிகளுக்காக காணியின் அமைந்துள்ள இடம், அளவு, இடத்தின் நிலையான எண், உரித்து தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்புடனான உரித்துப் பத்திரத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான வெட்டுமுக வரைபடத்தை தயார் செய்வதற்காக அளவை தொடர்பிலான ஒழுங்கமைப்பு.

அதன் கீழ் வருடாந்த வேலைத்திட்டத்தை ஒழுங்கு செய்தல், ஒதுக்கீடுகளைத் தயாரித்தல், அமைச்சுக்களிலிருந்து பெற்றுக்கொள்கின்ற நிதி ஒதுக்கீடுகளை மாகாண நில அளவையாளர் அலுவலகங்கள் 9 இன் மூலம் 'பிம்சவிய' அளத்தல் செயற்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் நிருவகித்தல், போதியளவு அரச நில அளவையாளர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் பதிவுசெய்யப்பட்ட அதிகாரம் பெறற் நில அளவையாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக ஏலத்தின் மூலம் தெரிவுசெய்தல்.

உரித்துச் சான்றிதழ்) உரித்துப் பத்திரம் (வழங்கப்பட்ட காணிகளில் நடைபெறுகின்ற பின்னரான அளத்தலின்போது வெட்டுமுக வரைபடத்தைப் பரிசோதித்து ,உறுதிப்படுத்தல் மற்றும் தரவு முறைமையை மேம்படுத்துதல்.

பொதுமக்கள் மற்றும் பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களின் முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படுதல் மற்றும் முகங்கொடுக்கின்ற அனுபவங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு ஏற்ப, ஏனைய நிறவனங்களுடன் ஒருங்கிணைந்து குறித்த சட்டத்தை மறுசீரமைப்பதற்கும் நடவடிக்கைகளுக்காக பங்களிப்புச் செய்தல் ,காணி அமைச்சு தொடர்பிலான முன்னேற்ற மறுசீராய்வு நடவடிக்கைகள் ,காணி உரித்து நிர்ணயித்தல், உரித்துப் பதிவாளர் , கணக்காய்வுத் திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் விசாரணைகள் குறித்தும் செயற்படுதல.

உரித்து பதிவு செய்வதற்கான அளத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட அதிகாரமுடைய நில அளவையாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை வழங்குதல்.

2025 **ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட இலக்குகள்**

| **மனித வள விவரங்கள்** | **இணைத்தல்** | **இலக்குகள் - காணித் துண்டுகள்** | **நிதி** |
|---|---|---|---|
| அரச நில அளவையாளர்கள் (8.1) | 155 | 55800 | ரூ. 535 மில்லியன் |
| கொள்முதல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற அளவையாளர்கள் | 161 | 38550 | |
| திருத்த அளவீடுகள் (8.2) | - | 500 | |
| பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற அளவையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பிந்திய அளவீடுகள் | - | 10,000 | - |
| **மொத்தம்** | 316 | 104850 | **ரூ.** 535 **மில்லியன்** |

**<u>செயலாற்றுகை</u>**

| மனித வளங்கள் பற்றிய விபரம் | உரித்துகள் நிர்ணயிக்கும் ஆணையாளர் நாயகம் முன்வைத்த பிரதேசத்தினுள் முடிக்கப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை | பிம்சவிய அளவீடுகள் முன்னெடுக்கப்பட்ட பிரதேசத்தினுள் உரித்துகள் நிர்ணயிக்கும் ஆணையாளரின் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதன் பின் தற்போதுள்ள அளந்த துண்டுகளின் எண்ணிக்கை | உப கூட்டுத் தொகை | பிம்சவிய அளவீடுகள் முன்னெடுக்கப்பட்ட பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர்கள் முன்னெடுக்கின்ற பிற்கால அளவீட்டுத் துண்டங்களின் எண்ணிக்கை | பிரதேச செயலாளர்களின் அளவீட்டுக் கோரிக்கைகளுக்கு அமைய எல்லை வரைபடங்களாக தயாரித்துள்ள துண்டங்களின் எண்ணிக்கை | மொத்தகாணித் துண்டுகள் | நிதி (மில்லியன் ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| அரச நில அளவையாளர்கள் | 53098 | 746 | 53844 | - | 2720 | 56564 | 214.5 |
| பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற நில அளவையாளர்கள் | 34070 | 25 | 34095 | 11554 | 739 | 46388 | |
| **மொத்தம்** | 87168 | 771 | 87939 | 11554 | 3459 | 102952 | 214.5 |

**முன்னேற்றம் சத வீதத்தில்**

| | **<u>மதிப்பீடு</u>** | **<u>முன்னேற்றம்</u>** | **<u>சதவீதம்</u>** |
|---|---|---|---|
| பௌதீக - காணித் துண்டுகள் | 94350 | 102952 | 109.1% |
| நிதி - மில்லியன் ரூபாய் | 535 | 214.5 | 40.1% |

உரித்துப் பதிவுசெய்யப்பட்ட அளவை தொடர்பில் ஏற்பட்ட பிணக்குகள் தொடர்பில் பொதுமக்கள் முன்வைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படுதல் (திணைக்களம், மாவட்டம் மற்றும் மாகாண அலுவலகம், காணி உரித்துகள் நிர்ணய ஆணையாளர்கள் மற்றும் உரித்துகள் பதிவு செய்யும் அலுவலக ஒருங்கிணைப்புடன்)

| **பிரச்சினைகள் கிடைக்கப் பெறுதல்** | **முந்தைய ஆண்டின் மீதமுள்ளவை** | **ஆண்டு முழுவதும் பெறப்பட்டது** | **ஆண்டினுள் முடிக்கப்பட்டவை** | **மீதமுள்ளவை** |
|---|---|---|---|---|
| நில அளவையாளர் நாயக | 56 | 50 | 12 | 94 |
| மாவட்ட அலுவலகங்களுக்கு | 684 | 130 | 86 | 728 |

**சான்றுறுதிச் சான்றிதழ்கள் வழங்குதல்**

| | |
|---|---|
| 2024.12.31 அன்றைய தினத்திற்கு சான்றுறுதிச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ள அளவு | - 2011 |
| 2025 ஆண்டில் பெறப்பட்டுள்ள சான்றுறுதிச் சான்றிதழ்களின் அளவு | - 33 |
| 2025.12.31 ஆம் தினத்திற்கு சான்றுறுதிச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ள மொத்த அளவு | - 2,044 |

## 17. **உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

நில அளவையாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ், செயற்படுகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தனித்தன்மையை தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் இல. 40(3) பிரிவின் மற்றும் நிதி ஒழுங்கின் 134(1) மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

**வகிபாகங்கள்**

நிதித் திட்டமிடல், உள் நிருவாகம், புத்தகங்கள் மற்றும் கணக்குகளை முறையாக பராமரித்தல் மற்றும் அவற்றைச் சரியாக செய்யப்படுவதை உறுதி செய்தல், அந்த நடவடிக்கைகளில் பிழைகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிந்து தடுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற உள்ளகக் கண்காணிப்பு மற்றும் போதியது என்பது தொடர்பிலான தொடர் ஆய்வு செய்தல் மற்றும் சுய மதிப்பீட்டினை மேற்கொள்ளல், திணைக்களச் செயலாற்றுகை மற்றும் செயற்றிறன் குறித்த விமர்சனங்களை மேற்கொள்ளல்.

**செயலாற்றுகை**

தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது பிரதான உள்ளக கணக்காய்வாளரையும், மூன்று கணக்காய்வு உத்தியோகத்தர்களையும், திணைக்கள உதவியாளர் ஒருவரையும் கொண்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில், ஐந்து மாவட்ட அலுவலகங்கள், வடமேல் மற்றும் தென் மாகாண அலுவலகங்களாக 02 உம், மற்றும் தலைமை அலுவத்தின் கணக்காய்வுகள் பத்துமாக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 18. **பரீட்சைகள் பிரிவு**

**வகிபாகங்கள்**

அனைத்துத் திணைக்களங்களினதும் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகள், அரச சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள முறையின் அடிப்படையில் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் காண் பரீட்சைகளை நடாத்துதல்.

**<u>செயலாற்றுகை</u>**

| தொ. இல. | பரிட்சை | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தகைமை பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட / குறிப்பிடப்பட்ட தினங்கள் | சமூகமளித்திருந்தவர்களின் எண்ணிக்கை | விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | பெறுபேறுகள்வெளியிடப்பட்ட திகதி | சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை | பலவீனமான சித்திகளைப்பெற்றவர்களின் எண்ணிக்கை | செலவாகிய மொத்த தொகை (ரூபா) | ஒரு பரீட்சார்த்திக்காக செலவழிக்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை நில அளவை சேவையின் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கான *முதலாவது* வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2024/ 2025 | 69 | 68 | 2025.08.05 | 59 | 2025.03.20 | 2025.12.16 | 29 | - | 70500.00 | 1036.76 |
| 2 | இலங்கை நில அளவை சேவையின் தரம் II இன் உத்தியோகத்தர்களுக்கான *இரண்டாம்* வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – (2025 (1) (2026) | 28 | 05 | - | - | - | - | - | - | - | - |
| 3 | முதனிலை *தொழில்நுட்பம் அல்லாத சேவைகளின் வகையைச் சேர்ந்த* பதவிகளுக்கு முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (திணைக்கள உதவியாளர்) – 2025 (மார்ச்) | 04 | 04 | 2025.03.10-14 | 04 | 2025.02.07 | 2025.04.09 | 03 | - | - | - |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | முதனிலை *தொழில்நுட்பம் அல்லாத சேவைகளின் வகையைச் சேர்ந்த பதவிகளுக்கு* இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (திணைக்கள உதவியாளர்) – 2025 (மார்ச்) | 02 | 02 | 2025.03.10-14 | 02 | 2025.02.07 | 2025.04.09 | 02 | - | - | - |
| 5 | முதனிலை *தொழில்நுட்பம் அல்லாத சேவைகளின் வகையைச் சேர்ந்த பதவிகளுக்கு* இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (சுற்றுலா மாளியை பொறுப்பாளர்) – 2025 (மார்ச்) | 01 | 01 | 2025.03.10-14 | 01 | 2025.02.07 | 2025.04.09 | 01 | | | |
| 6 | நில அளவைத் திணைக்களத்திற்கு வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2025 | 417 | 394 | 2025.07.05 | 296 | 2025.05.10 | 2025.09.16 | 10<br>0 | - | 127524.28 | 323.66 |
| 7 | நில அளவீட்டு உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்ட முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைத – 2025 (மே) *(மாவட்ட மட்டத்தில்)* | 28 | 28 | 2025.05.05-09 | 27 | 2025.02.27 | 2025.06.30 | 27 | - | - | - |
| 8 | நில அளவீட்டு உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்ட இரண்டாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைத – 2025 (மே) | 139 | 139 | 2025.05.10 | 119 | 2025.02.27 | 2025.06.30 | 11<br>4 | - | 39284.00 | 282.61 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | நில அளவை கள உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான *3 வது* வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2025 (மே) (மாவட்ட மட்டத்தில்) | 03 | 03 | 2025.05.19-23 | 03 | 2025.02.27 | 2025.06.24 | 03 | - | - | - |
| *10* | நில அளவைத் திணைக்களத்தின் (நிறைவேற்று சேவை வகுதி) தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக நடாத்தப்பட்ட முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2025 | 04 | 04 | 2025.04.04 | 04 | 2025.02.14 | 2025.05.07 | 02 | - | - | - |
| *11* | நில அளவீட்டு கள உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2025 (நவம்பர்) (மாவட்ட ரீதியாக) | 11 | 08 | 2025.11.10-14 | 08 | 2025.08.29 | 2025.12.16 | 08 | - | - | - |
| *12* | நில அளவீட்டு கள உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட இரண்டாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2025 (நவம்பர்) (மாவட்ட ரீதியாக) | 76 | 75 | 2025.11.16 | 66 | 2025.08.29 | 2026.01.27 | 58 | - | 31038.24 | 413.84 |
| *13* | நில அளவீட்டு கள உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட மூன்றாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2025 (நவம்பர்) (மாவட்ட ரீதியாக) | 01 | 01 | 2025.11.17-21 | 01 | 2025.08.29 | 2025.12.16 | 01 | - | - | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *14* | உரிமம்பெற்ற திட்டமிடல் வல்லுநர்களாகநில அளவையாளர் நாயகத்தின் சான்றிதழ் வழங்கல் பரீட்சை– 2025 (பகுதி I) | 86 | 84 | 2025.07.26 | 52 | 2025.05.30 | 2025.09.29 | 06 | - | 54957.19 | 654.25 |
| *15* | உரிமம்பெற்ற திட்டமிடல் வல்லுநர்களாகநில அளவையாளர் நாயகத்தின் சான்றிதழ் வழங்கல் பரீட்சை– 2025 (பகுதி II) | 06 | 06 | 2025.11.21 | 06 | 2025.11.07 | 2025.12.30 | 02 | - | 9055.00 | 1509.16 |
| *16* | காணி அளவீட்டுச் சபையின் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2024(2025) | 365 | 365 | 2025.03.22 | 187 | 2024.8.12 | 2025.4.22 | 15 | - | - | - |

## 19. **முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு**

**<u>வகிபாகங்கள்</u>**

- உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்குத் தேவையான கருத்தரங்குகள் , செயலமர்வுகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல்.
- உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக குறித்த தகைமை உள்ள அதிகாரிகளை கலந்துகொள்ளச் செய்தல்.

**<u>செயலாற்றுகை</u>**

தயவுசெய்து முதன்மை அறிக்கையின் 63 - 67 ஆம் பக்கங்களைப் (மனித வள அபிவிருத்தி) பார்க்கவும்.

## 20. முன்னேற்றப் பிரிவு

**வகிபாகங்கள்**

- நில அளவையாளர் நாயக அலுவலக கிளைகளினால் அனுப்பப்படுகின்ற கடிதங்களை தபால் திணைக்களத்திற்கு ஒப்படைத்தல்.
- நில அலவையாளர் நாயகத்தின் அலுவலகக் கிளைகளுக்குக், கிடைக்கப்பெறுகின்ற கடிதங்கள் தொடர்பில் பின்னூட்டல் செய்வதற்கான தரவு முறைமைக்கு (Mail Tracking System) உள்ளீடு செய்யப்பட்டு திணைக்களத்தின் அனைத்து, குறித்த கிளைகளுக்கு பகிர்ந்தளித்தல்,
- திணைக்களத்தின் சகல சுற்றறிக்கைகளையும் திணைக்கள வலைத்தளத்தின் உள்ளீடு செய்தல்.
- திணைக்களத்தின் கடிதங்களை மொழிபெயர்ப்புச் செய்தல்
- திணைக்கள உத்தியோகத்தர்களை மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம் வழங்கும் அடிப்படையின் கீழ் பணிகளில் அமர்த்துவதற்குத் தேவையான அனுமதியை வழங்குதல்.
- திணைக்களத்தின் வகிபாகங்கள், மற்றும் பல்வேறு பிரிவுகளையும் அறிந்துகொள்வதற்காக வருகை தருகின்ற பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாதுகாப்பு படை உத்தியோகத்தர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்
- பாதீட்டு செயற்குழுவின் தேவைப்பாடுகளுக்காக முன்வைக்கப்படுகின்ற முன்னேற்ற அறிக்கை மற்றும் முன்னைய ஆண்டிற்கான நில அளவையாளர் நாயகத்தின் செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல்.
- நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தின் கிளைகளின் ரோணியோ அச்சிடல் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொடுத்தல்.

**செயலாற்றுகை**

- தபால் திணைக்களத்திற்கு 14040 கடிதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- திணைக்களத்திற்குக் கிடைத்த 27179 கடிதங்களை பற்றிய பின்னூட்டலிடும் தரவு முறைமைக்கு உள்ளீடு செய்யப்பட்டுள்ளது .
- 88 சுற்றறிக்கைகள் வலைத்தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.
- சிங்கள - ஆங்கில மொழிபெயர்ப்பின் கீழ் 44 கடிதங்கள் (219 பக்கங்கள்) மொழிபெயர்ப்புச் செய்யபட்டுள்ளதுடன், தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஓருவர் திணைக்களத்தில் இல்லாமையினால் அவ்விடயங்களுக்குரிய 91 கடிதங்கள் (358 பக்கங்கள்) வெளியக மொழிபெயர்ப்பாளர்கள் மூலம் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளன.
- வெளியக மொழி பெயர்ப்பாளர்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்ற, சுற்றறிக்கைகள் மற்றும் சுற்றறிக்கைக் கடிதங்களின் திணைக்களத்திற்கே உரிய விசேட தொழில்நுட்ப சொற்களை செம்மை மிக்கதாக கடந்த ஆண்டு நியமிக்கப்பட்ட மொழிபெயர்ப்புக்களை பரிசீலிக்கும் குழுவின் மூலம் தயாரித்துக் கொள்ள முடியுமானதாக இருந்தது.
- மேலதிக நேரம் மற்றும் விடுமுறைத் தின சம்பளம் வழங்கும் முறையின் கீழ் கடமையாற்றுவதற்குத் தேவையான 1574 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன .
- 2026 பாதீட்டு செயற்குழுவின் தேவைப்பாடுகளுக்காக வழங்கப்படுகின் முன்னேற்ற அறிக்கை 2025 ஆம் ஆண்டுக்கான நில அளவையாளர் நாயகத்தின் செயலாற்றுகை அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.
- கடிதங்கள் மற்றும் மாதிரிப் படிவங்கள் 96 (60,000 பிரதிகள் ) ரோணியோ இயந்திரத்தின் மூலம் அச்சிடப்பட்டுள்ளன.

## கள அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

### 1. காணி அளத்தல்கள்

2025 **ஆம் ஆண்டிற்கான காணி அளவீட்டு முன்னேற்றம்**

2025 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட இலக்குகளுக்காக 122.51% முன்னேற்றம் எட்டப்பட்டு உள்ளது.

| **அளவீட்டு வகை** | **பௌதீக முன்னேற்றம்** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **வருடாந்த இலக்கு** | | **ஒட்டுமொத்த முன்னேற்றம்** | | **அடைந்த முன்னேற்றம்** (%) | |
| | **அளவையியல் மாதங்கள்** | **துண்டுகள்** | **அளவையியல்** | **துண்டுகள்** | **அளவையியல் மாதங்கள்** | **துண்டுகள்** |
| எல்லைக் கல் இடும் நில அளவைகள் (காணித் துண்டங்கள்) | 2363 | 47260 | 2156 | 43110 | 91 | 91 |
| நானாவித அளவைகள் | 858 | 25730 | 828 | 24832 | 97 | 97 |
